வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 19.07.2021 திங்கட்கிழமை | இதழ் : 228 | பக்கங்கள் : 16




# தடுப்பூசி ஆலோசனை குழுவிலிருந்து 3 நிபுணர்கள் அதிரடியாக இராஜினாமா

## ஆலோசனைகள் புறக்கணிக்கப்படுவதாக குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

சீனாவின் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோவிட் தடுப்பூசி ஆலோசனை குழுவிலிருந்து மூன்று உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளார்கள். சீனாவின் சினோவக் தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு இலங்கையின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அனுமதி வழங்கிய பின்னர் கோவிட் தடுப்பூசிகள் தொடர்பான ஆலோசனை குழுவிலிருந்து குறிப்பிட்ட மூன்று நிபுணர்களும் இராஜினாமா செய்துள்ளனர்.

15

## 30 ஆண்கள் உள்ளிட்ட 46 பேர் மேலும் மரணம்

கொழும்பு, ஜூலை 19

நாட்டில் மேலும் 46 பேர் கொரோனா தொற்றால் மரணித்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்

15

### அமைச்சர் கம்மன்பிலக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணை; இன்று முதல் இரு நாள் விவாதம்

கொழும்பு, ஜூலை 19

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, இன்று காலை 10.00 மணிக்கு பரபரப்பான சூழ்நிலையில் பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்

15

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராகவே ஆளுங்கட்சி எம்.பிக்கள் வாக்களிக்க வேண்டும்

### ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 19

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகவே ஆளுங்கட்சி எம்.பிக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டம்

15



## பங்களாதேஷ் பிரதமரின் மாம்பழ இராஜதந்திரம்?

கொழும்பு, ஜூலை 19

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, பங்களாதேஷ் நாட்டு மாம்பழங்களை தனது பரிசாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளார்.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் தாரெக் எம்.டி.அரிபுல் இஸ்லாம்

15

## வடக்கில் நேற்று மட்டும் 44 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணத்தில் 26 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 44 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்றைய தினம் 790 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோத

15

## இலங்கையில் ‘டெல்டா’ தாண்டவமாடும் ஆபத்து

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

“இலங்கையில் ‘டெல்டா’ வைரஸ் தொற்று தீவிரமடையும் ஆபத்து உள்ளது.”

- இவ்வாறு மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

உலகின் பல நாடு

15

## 1,402 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,402 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 84 ஆயிரத்து 914 ஆக அதிகரித்துள்ளது

அத்துடன், கொரோ

15

## மேலும் 56 இலட்சம் தடுப்பூசிகளை சீனா வழங்குகிறது

கொழும்பு, ஜூலை 19

சீனாவிலிருந்து மேலும் 56 இலட்சம் சினோபாம் தடுப்பூசிகள் எதிர்வரும் 2 - 3 வாரங்களுக்குள் வழங்கப்படவிருப்பதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தினால் நேற்று மாலை வெளியிடப்பட்ட ருவிட் செய்தியிலேயே இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## அதிநவீன நீர்மூழ்கியை தூத்துக்குடியில் நிலைநிறுத்தியது இந்திய கடற்படை

### சீனக் கடற்படையின் பலம் இலங்கையில் அதிகரிப்பதற்கு பதில் நடவடிக்கையாம்

தூத்துக்குடி ஜூலை 19

இந்திய கடற்படைக்கு சொந்தமான அதிநவீன நீர்மூழ்கி கப்பல் ‘சிந்துஷாஸ்ட்ரா’ தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள ஐ.என்.எஸ். கட்டபொம்மன் கடற்படைக்கான கப்பல் தளத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக இந்தியாவின் முன்னணி தொலைக்காட்சி சேவை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

சமீப காலமாக வங்காளவிரிகுடா பெருங்கடலில் இலங்

15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

வடக்கு மாகாண சபை விக்னேஸ்வரன் ஐயாவின் தலைமையிலான ஆட்சியில் இருந்த காலம். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தவராசா, தான் பிரதிநிதித்துவப்படுத்திய ஈ. பி. டி. பி. கட்சியிலும் இருக்கவில்லை.

மாகாண சபை அமர்வுகளில் அவர் சொன்ன கதை ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

மாணிக்கவாசகர் இருந்த ஆலயம் ஒன்றுக்கு, ஒருநாள் சிவபெருமான் மாறுவேடத்தில் வந்தாராம். அங்கே வந்த சிவபெருமான் அங்கிருந்த பக்தர்களை ஓர் இடத்திற்கு வருமாறு அழைக்க, பக்தர்கள் அனைவரும் அந்த இடத்தை நோக்கி சென்றனர். ஆனால், மாணிக்கவாசகர் மாத்திரம் அங்கே செல்லாது இருந்துவிட்டார்.

சில நிமிடங்களில்தான் மாணிக்கவாசகருக்கு அழைத்தது சிவபெருமான்தான் என்பது புரிந்தது. அடடா...! சிவபெருமான் வந்து அழைத்தபோதும் போகாமல் நின்றுவிட்டேனே என்ற குற்ற உணர்வில் அவர் பாடியது தான் திருவாசகம்.

இன்று அதன் மொழிபெயர்ப்பைப் படிக்கின்றவர்கள் கூட அதன் பெருமையை பேசுகின்றனர்.

கத்தோலிக்க பாதிரியாரான ஜெகத் கஸ்பர் ராஜ் அடிகளார், திருவாசகத்தால் கட்டுண்டு, இளைய ராஜாவை வைத்து திருவாசகத்தை சிம்பொனியில் இசையமைத்து பெருமைப்படுத்தினார்.

திருவாசகத்தின் பெருமை அல்ல இங்கே சொல்ல வருவது. தனது தவறை உணர்ந்து அன்று மாணிக்க வாசகர் பாடியதுபோல, இன்று தனது தவறுகளை முதல்வர் விக்னேஸ்வரன் உணர்ந்துகொண்டால் ஒரு திருவாசகம் அல்ல பல திருவாசகங்களைப் பாடியிருப்பார் என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மாகாண சபையில் தெரிவித்திருந்தார்.

ஒரு திறமையான நிர்வாகிக்கு அதிகாரம் இருந்தால் தான் செய்ய முடியும் என்பதல்ல. இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு, தனது திறமையால் செய்து காட்டுகின்ற ஒருவரே சிறந்த நிர்வாகியாக இருக்க முடியும்.

அதிகாரங்கள் இருந்தால் சாதிப்பது என்பது தந்தையின் சொத்துக்களை வைத்து வர்த்தகம் செய்து சாதிப்பது போன்றது.

மாகாண சபையை நிர்வகித்தபோது விக்னேஸ்வரனிடம் சுமார் இருபதுக்கும் அதிகமான கேள்விகளை ஒரு தடவை தவராசா கேட்டார். மறுநாள் பதிலளிப்பதாகக் கூறிச் சென்ற முதல்வர், மறுநாள் வந்து கேள்விகளுக்கு பதிலளித்தாரோ தெரியவில்லை. முதலில் அவர் கூறியது.

‘தவராசா ஈ. பி. டி. பியிலும் இப்போது இடமில்லாமல் போக்கிடமில்லாமல் இருப்பவர். அவர் தனது மனவேதனையை இங்கே வெளிப்படுத்தப் பார்க்கிறார்.’ என்றவர், ஈ. பி. டி. பி. துரோகிகளின் கட்சி என்றும் ஒரு போடுபோட்டார்.

மறுநாள் பத்திரிகைகளில் அதுதான் தலைப்புச் செய்தி. இதைப்பார்த்த இந்த ஊர்க்குருவி, நீதிவான் இப்பதான் சரியான தமிழ்த் தேசிய அரசியலுக்கு வந்திருக்கிறார் என்று நண்பர்களுடன் பகிர்ந்துகொண்டதாக ஞாபகம்.

நீதிவான் தன்முன் வைக்கப்பட்ட பதிலளிக்க முடியாத தவறுகளுக்கு பதில் சொல்வதை விடுத்து, தவராசா குறித்து தனிப்பட்ட தாக்குதல் நடத்தியதைப் பார்த்து, நம்மவர்கள் பலரும், ‘சா... முதல்வர் குடுத்தார் பார்த்தியளோ... தவராசாவுக்கு அந்தமாதிரி...’ என்று துள்ளிக்குதித்திருப்பார்கள்.

முதல்வர் பதவியில் கூட்டமைப்பால் அமர்த்தப்பட்ட விக்னேஸ்வரன் ஐயா, பின்னர் கூட்டமைப்பினருடன் முரண்பட்ட சங்கதிகள் பற்றி முன்னரும் பல தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டாகிவிட்டது.

நேற்றுமுன்தினம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இரண்டு, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினரை சந்தித்து பேசியிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பான செய்திகளைப் படித்தபோது ஏனோ தெரியவில்லை. இந்த சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மனத்திரையில் வந்து போயின.

முதல்வராக இருந்து கூட்டமைப்பினருடன் முரண்பட்டுக்கொண்டு வெளியே வந்தபோது விக்னேஸ்வரன் என்ற தனி மனிதருக்கு இருந்த மக்கள் ஆதரவு அலை, போகப்போக குறைந்து பாராளுமன்றத் தேர்தலில் ஓர் இடத்தையாவது பெற முடிந்தது. அதற்கும் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் நடந்துகொண்ட எதேச்சாதிகாரமான போக்கு, தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய வெறுப்பின் அலையே விக்னேஸ்வரனுக்கு வாக்குகளாக மாறியது என்பதையும் முன்னர் இந்தப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அடுத்த தேர்தல் ஒன்றிலேயே அவரின் நிலை - அடுத்தது என்ன என்பது தெரியவரும். இனி விக்னேஸ்வரனுடனான கூட்டமைப்பு சந்திப்பு குறித்து நாளை பேசுவோம்.

**- ஊர்க்குருவி**

# மீன்பிடிக்க சென்ற மூவர் மாயம்! படகு மட்டும் மன்னாரில் ஒதுங்கியது

புத்தளம், ஜுலை 19

புத்தளம் கற்பிட்டி பகுதியிலிருந்து இயந்திரப் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்கள் நேற்று மாலை கரைதிரும்பவில்லை என்று அவர்களின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்த மீனவர்களி கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கற்பிட்டியிலிருந்து படகில் மீன் பிடிக்க சென்றனர். இந்த நிலையில் 10 நாட்களாக எந்த தொடர்பும் இல்லை என்று அவர்களின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கற்பிட்டி வன்னிமுந்தல் பகுதியைச் சேர்ந்த எம். எஸ். முஹம்மட் அலிகான் (வயது 26), முஹம்மட் நபீல் (வயது 45) மற்றும் கற்பிட்டி மணல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த நிசங்க (வயது 21) ஆகியோரே இவ்வாறு காணமல் போயினர்.

காணாமல் போனவர்கள் குறித்து கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், கற்பிட்டி கடற்படை முகாமிலும் உதவி கோரப்பட்டுள்ளது.

அத்துடன் கற்பிட்டி மீனவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் காணாமல் போன மூன்று மீனவர்களையும் தேடி வருவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த மீனவர்கள் பயணித்தனரெனக் கூறப்படும் 7088 இலக்கமுடைய இயந்திரப்படகு ஒன்று மன்னார் மாவட்டத்தின் பியர் பிரதேசத்திலுள்ள தீடைத் தீவு பகுதியில் ஒதுங்கியுள்ளதா மன்னார் பொலிஸ் ஊடாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், படகு மாத்திரமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது எனவும் மீனவர்கள் தொடர்பில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் உறவினர்கள் மேலும் குறிப்பிட்டனர். இந்தத் தகவல் கற்பிட்டி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ஐ)

## மோட்டார் சைக்கிள் அடித்து உடைப்பு!

கிளிநொச்சி, ஜுலை 19

புளியம்பொக்கணையில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அடித்து உடைக்கப்பட்டு முழுமையாக சேதப்படுத்தப்பட்டுள்ளது.

முற்பகை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்காலாம் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இதே பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீ மூட்டி எரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே இந்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நீர்வீழ்ச்சியில் விழுந்த யுவதியை காணவில்லை

நுவரெலியா, ஜுலை 19

திம்புளை - பத்தனை டெவோன் நீர்வீழ்ச்சியில் நேற்று மாலை யுவதி ஒருவர் தவறி விழுந்து காணமல் போயுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

நீர் வீழ்ச்சியை பார்வையிட சென்ற 4 பெண்களில் ஒருவர் உச்சியில் நின்றவாறு கால் கழுவியபோதே தவறுண்டு விழுந்தார்.

இவ்வாறு தவறி விழுந்தவர் தலவாக்கலை லிந்துலை லென்தோமஸ் தோட்ட பகுதியைச் சேர்ந்த 19 வயதான மணி பவித்ரா என்பவராவார்.

அவரை தேடும் பணிகள் நேற்றிரவு வரை தொடர்ந்திருந்தன. (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 19.07.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி TV CHANNEL - 2 — 19.07.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
19.07.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஈழத் தமிழர்களும் சீனாவும்

உலக அரசியல் விவாதங்களில் சீனா என்பது ஒரு சூடான விவாதப் பொருள். பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் சீனா ஒரு விடயமாக இருக்கவில்லை. பொதுவாக நாடுகளுக்கு இடையிலான உறவு எவ்வாறு நோக்கப்படுமோ அப்படியான ஒருநிலையில்தான் சீனாவும் நோக்கப்பட்டது. நவீன சீனாவிற்கும் இல்கைக்குமான உறவு 1957 இல் ஏற்படுத்தப்பட்ட இறப்பர் - அரிசிஉடன்பாட்டுடன் ஆரம்பமாகியது. வரலாற்று ரீதியாக சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்புகள் இருந்த போதும், அதுஅரசியல் ரீதியில் முக்கியமான ஒரு விடயமாக இருந்ததில்லை. இலங்கையின் இராஜதந்திர அரசியல் உரையாடல் என்பது இந்தியமற்றும் மேற்குலக தொடர்புகளின் வழியாகவே நோக்கப்பட்டு வந்தது.

1977இல் பதவிக்கு வந்த, ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, அதுவரையில் இலங்கை கடைப்பிடித்து வந்த அணிசாரா கொள்கைக்கு மாறாக செயல்பட எத்தனித்தார். இது, இலங்கையை பனிப்போர் - போட்டி அரசியலுக்குள் இழுத்துவிட்டது. ஜே. ஆரின் அணுகுமுறையால் அதிருப்தியடைந்த இந்திராகாந்தி தலைமையிலான இந்தியா, இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையீடு செய்தது. 1983இல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அழித்தொழிப்பு வன்முறைகளை தொடர்ந்து, பெருமளவான ஈழ மக்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தனர். ஆறு கோடி தமிழ் மக்களை கொண்டிருக்கும் இந்தியா, அயல் நாடான இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும்போது, அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்னும் நிலைப்பாட்டை இந்திரா வெளிப்படையாகவே முன்வைத்தார். இதுவே, பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தமாகப் பரிணமித்தது.

இந்தியாவை பொறுத்தவரையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கசப்பான அனுபவங்களைக் கொடுத்திருந்தது. இந்திய ஆய்வாளர்களின் வாத்தையில் கூறுவதனால், இந்தியா விரல்களை சுட்டுக்கொண்ட அனுபவத்துடன் இலங்கையிலிருந்து வெளியேறியது. இதன்பின்னர், இலங்கை விவகாரங்களில் - முக்கியமாக தமிழர் விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்வதைத் தவிர்த்திருந்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போதும் இந்தியா அமைதி காத்தது. இலங்கை அரசாங்கத்தின்

இராணுவ ரீதியான உதவி கோரலையும் இந்தியா நிராகரித்திருந்தது. அதே போன்று மனித உரிமைகள் விவகாரத்தை முன்வைத்து அமெரிக்காவும் கொழும்பிற்கு இராணுவ ரீதியான உதவிகளை வழங்கவில்லை. இந்த இடம்தான் சீனாவிற்கும் - இலங்கைக்குமான புதிய அத்தியாயத்தை திறந்தது. இந்த அத்தியாயம் தொடர்பில்தான் இப்போது பலரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

சீன நிறுவனமொன்று, வடக்கில் கடலட்டை பண்ணை தொழிலில் ஈடுபடுவதாகவும், இதன் மூலம் சீனா வடக்கிற்குள் வந்துவிட்டதாகவும் தமிழ் அரசியல்வாதிகள் கொதித்துக் கொண்டிருந்தனர். இத்தனைக்கும் கூட்டமைப்பின் உதவியுடன் நல்லாட்சி செய்யப்போவதாகக் கூறிய ரணில்-மைத்திரி அரசாங்கம்தான், இந்த கடலட்டை பண்ணைக்கு அனுமதி கொத்திருந்தது. இப்போது அதனை, பிழையென்று கூட்டமைப்பினரே கூறுகின்றனர். இந்த விடயத்தை அரசியல் ரீதியில் பார்ப்பவர்களோ, சீனாவை எதிர்ப்பது புத்திசாலித்தனமல்ல என்று அரசியல் வகுப்பெடுக்க முயற்சிக்கின்றனர். இந்த இடத்தில் சீனாவை தமிழர்கள் எவ்வாறு நோக்க

வேண்டுமென்னும் கேள்வி எழுகின்றது.

உண்மையில், சீனாவை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது இங்கு ஒரு விடயமே அல்ல. விடயம் தமிழர்கள் எந்த விடயங்களோடு தங்களை அடையாளப்படுத்தப் போகின்றனர்? எவருடன் நின்றால் தங்களின் கோரிக்கைகளை சர்வதேச அரங்குகளில் தமிழர்களால் முன்வைக்க முடியும்? சீனா அடிப்படையிலேயே மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை ஆதரிக்கும் வெளிவிவகார கொள்கையை கொண்டிருக்காத நாடு. மேலும், ஒரு தனிக்கட்சியின் கீழ், வாழ்நாள் ஜனாதிபதியை கொண்டிருக்கும் நாடு. அவ்வாறான ஒரு நாட்டிலிருந்து ஈழத் தமிழர்கள் நீதியை, அரசியல் ஆதரவை கோர முடியுமா? இந்த அடிப்படையான கேள்வியிலிருந்துதான் தமிழர்கள் சீனாவை விளங்கிக்கொள்ள வேண்டும்.

சீனாவுடன் ஈழத் தமிழர்கள் தங்களை ஒருபோதுமே அடையாளப்படுத்த முடியாது. இதனையும் மீறி சீனாவுடன் செல்ல வேண்டுமென்றால், தமிழர்கள் தங்களின் அரசியல் உரிமை கோரிக்கைகளை முற்றிலுமாகக் கைவிட வேண்டும். சீனாவுடனும் தமிழர்கள் உறவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று கூறுபவர்கள், மறைமுகமாக, ஈழத் தமிழர்கள் தங்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகளை கைவிட வேண்டுமென்றா கூறுகின்றனர்?

# எதிரணியினரின் புதிய கூட்டணி !

-அலசுவது இராஜதந்திரி-

அரசாங்கத்துக்கு எதிராக புதிய அரசியல் வியூகம் ஒன்றை அமைக்க எதிரணியினர் ஒன்று சேர்ந்துள்ளனர். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இந்தப் புதிய கூட்டணிக்கான ஆரம்பத்துக்கு அத்திபாரமிட்டுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட தென்னிலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் மட்டுமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தப் புதிய கூட்டணியில் சேர்வதற்கு முன்வந்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும் நேற்று முன்தினம் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவினால் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய கூட்டணி குறித்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கில் சில தமிழ் கட்சிகளின் ஒருங்கிணைப்பாக இருந்து வருகின்ற அதேசமயம், தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளுடன் கரு ஜயசூரியவின் 'நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்க'த்துடன் இணைந்து அரசுக்கு எதிராக ஜனநாயக ரீதியான போராட்டமொன்றில் குதிப்பதற்கு முன்வந்துள்ளது.

இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக குரல் கொடுத்துவரும் அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி 2018ஆம் ஆண்டு ஆட்டம் கண்டபோது உறுதியுடன் சவால்களை எதிர்கொண்டு இலங்கையின் ஜனநாயக நடைமுறைகள் கேலிக்கூத்தாவதை தடுத்து நிறுத்துவதில் முன்னின்றிருந்தது.

**கூட்டமைப்பின் பங்களிப்பு**

இதேவேளை, 2015ஆம் ஆண்டு இலங்கையில் நல்லாட்சி என்ற புதிய அரசாங்கத்தை கொண்டுவருவதில்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகவே அமைந்திருந்தது.

இந்நிலையில், தற்போது பிரதான எதிர்கட்சி உட்பட தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் சிலவற்றுடன் கைகோத்து நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் ஜனநாயகத்தை பாதுகாக்கும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியுள்ளது.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த காலம் முதல் ஜனநாயக நடைமுறைகள் புறந்தள்ளப்பட்ட ஒரு சூழ்நிலையே நிலவிவருகின்றது. அரசியல் அவதானிகள் நாட்டில் ஜனநாயக விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பல முன்னணி பௌத்த பிக்குமார்கள் சந்தித்து நாட்டின் இன்றைய நிலவரம் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தனர்.

ஏற்கனவே அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி உட்பட நாட்டின் முன்னணி பௌத்த பிக்குமார்கள் பலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிமுறையை வெகுவாகவே சாடியுள்ளனர்.

**புதிய கூட்டணி**

இத்தகைய பின்னணியிலேயே தற்போது தென்னிலங்கையில் அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் என்று கருதப்பட்டவைக்கு எதிராக புதிய கூட்டணியொன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்றைய நாட்டு நிலவரத்தை எடுத்து நோக்கும்பட்சத்தில் நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தினால் புதிய அரசியல் கூட்டணியொன்று உருவாகின்றது எனக்குறிப்பிடுவதைவிட இப்புதிய கூட்டணியின் உருவாக்கம் நாட்டிலுள்ள அரசியல் சக்திகள் எவ்வளவு தூரம் தற்போதைய நாட்டு நிலவரம் தொடர்பாக அதிருப்தி கொண்டுள்ளன என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்பது பெயரளவில் மட்டுமே இருக்கின்றது. 1978ஆம் ஆண்டு நாட்டில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து இலங்கையில் பாராளுமன்ற ஆட்சியின் முக்கியத்துவம் குறைவடைந்து ஏறத்தாழ சர்வாதிகார போக்கிலான ஆட்சியே நிலைபெறலாயிற்று.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அதனை உள்ளடக்கிய அரசியலமைப்பு என்பவற்றை சிறீலங்கா சுதந்திர கட்சியைப்போல எந்த ஓர் அரசியல் கட்சியும் கடுமையாக விமர்சித்திருக்கவில்லை. ஆனால், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சியை அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியை விட அதனை கடுமையாக எதிர்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனோடிணைந்த ஏனைய கட்சிகளுமே நிறைவேற்று அதிகார ஆட்சியில் நீண்ட காலம் பதவியில் இருந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

எனவே, தெனனிலங்கையில் புதிய அரசியல் கூட்டணியின் உருவாக்கம் என்பது வெறுமனே இன்றைய ஆட்சியாளர்களின் எதேச்சையான போக்கை மட்டும் எதிர்ப்பதாக இல்லாமல் நாட்டில் முற்று முழுதான ஒரு புதிய அரசியல் கலாசாரத்துக்கும் அடித்தளமிடுவதாக அமைந்திருக்க வேண்டும். ■

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூலை - 19 திங்கட்கிழமை**
பிலவ வருடம் - ஆடி 03
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : தசமி




**மேடம்**
சவால்களில் வெற்றி பெறுவீர்கள். களைப்பு அதிகமாகும். பழைய நண்பர் ஒருவரைப் பலகாலம் கழித்துச் சந்திப்பீர்கள். பணியில் சில பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைப்பர்.

**இடபம்**
நல்ல தகவல் வந்து சேரும். உடல்நலம் மேம்படும். உடல்நிலை சீராகும். வீண் செலவுகள் குறையும். சேமிக்கலாம். கடன் பிரச்னை மறையும். உறவினருடன் கருத்துவேறுபாடு மறையும்.

**மிதுனம்**
சொத்து பிரச்னைக்கு பேச்சு மூலம் நல்ல முடிவு காண்பீர்கள். நண்பர்களால் நன்மை ஏற்படும். ஓரளவு வருமானம் உயரும். கடந்த கால குழப்பத்திலிருந்து வெளியேறி நிம்மதியடைவீர்கள்.

**கடகம்**
கடைசி நேரத்தில் பண உதவி கிடைக்கும். பிரச்னை தீரும். எதிர்பார்த்திருந்த வெளிநாட்டு வாய்ப்பு ஒன்று கிடைக்கப் பெறுவீர்கள். நண்பர் ஒருவரால் ஆதாயம். உடல்நிலை சீராகும்.

**சிம்மம்**
எதிர்பார்த்துக் கொண்டிருந்த நல்ல தகவல் வந்து சேரும். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். முன்னேற்றத்திற்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி**
தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகம் கிடைக்கும். வேண்டிய ஒருவருக்கு இருந்த பிரச்னையை தீர்த்து வைப்பீர்கள். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வருமானம் உயரும்.

**துலாம்**
சம்பந்தம் இல்லாத விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது.மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்லுவீர்கள். பணத்தைக் கையாளும்போது அதிக கவனம் வேண்டும்.

**விருச்சிகம்**
அன்றாட நடவடிக்கையில் நிதானமுடன் செயல்படுங்கள். நீண்ட நாளுக்குப் பின் உறவினர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான சம்பவம் ஒன்று நடக்கும். சுபச் செலவு அதிகரிக்கும்.

**தனுசு**
சொத்து சம்பந்தமான பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். நண்பர்கள் உதவுவர். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். குழப்பம் ஒன்று முடிவுக்கு வரும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**மகரம்**
குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்காக பாடுபடுவீர்கள். நண்பரின் மனக்கசப்பு நீங்கும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். இழந்த பொருள் ஒன்று கிடைக்கும். சொன்ன வாக்கு பலிக்கும்.

**கும்பம்**
அரசின் உதவிகள் கிடைப்பதற்காக எடுத்த முயற்சி பலிக்கும். வீண் செலவுகளை குறைப்பீர்கள். மனதில் நிம்மதி பிறக்கும். முடிந்தவரை சிக்கனமாக இருப்பீர்கள். பரபரப்பற்ற நாள்.

**மீனம்**
செலவுகளை கட்டுப்படுத்த முடியாமல் தவிப்பீர்கள். அக்கம்பக்கத்தினருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பொறுமை தேவை. தேவையில்லாத வாக்குவாதம் வேண்டாம். நிதானம் அவசியம்.

# உள்ளாட்சி தேர்தலின் போதும் தி.மு.கவுடனான கூட்டணி தொடரும்

## விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன் உறுதி

சென்னை, ஜூலை 19

"தமிழகத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தலும், அதைத் தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலும் நடக்க இருக்கிறது. இதில், தி.மு.கவுடனான கூட்டணி தொடரும்" என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று உறுதிப் படுத்தியுள்ளார்.

செய்தியாளர்களிடம் நேற்று உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

"அரசபயங்கரவாதத்தின் காரணமாக ஸ்டேன் சாமி மரணம் அடைந்திருக்கிறார். இது அரசக்கொலை. ஸ்டேன்சாமியை தனது ஒடுக்குமுறைகள் மூலம் அரசு பழிவாங்கியிருக்கிறது. பா.ஜ.க. ஆட்சியில் அறிவுசார்ந்த



சக்திகள் இடது சாரி சிந்தனையாளர்கள் குறிவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வரும் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் பல்வேறு பிரச்னைகளை எழுப்புவோம். மேகதாது அணை விவகாரம், புதிய மீன்வள மசோதா உள்ளிட்ட பிரச்னைகளுக்கு குரல் கொடுப்போம்" என்று தெரிவித்த திருமாவளவனிடம்,

"தமிழகத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தலும், அதைத் தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலும் நடக்க இருக்கிறது. இதில் திமுக கூட்டணி தொடருமா?"என்று கேள்வி எழுப்பிய போது, "இதிலென்ன சந்தேகம்? உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.கவுடன் எங்கள் கூட்டணி தொடரும்" என்று பதிலளித்தார் திருமாவளவன்.

# மீண்டும் டில்லி புறப்பட்டார் ஸ்டாலின் ஜனாதிபதி ராம்நாத்துடன் இன்று பேச்சு!

சென்னை, ஜூலை 19

மேகதாதுவில் அணை கட்டப்பட வேண்டும் என்பதில் கர்நாடக அரசு தீவிரமாக செயல்பட்டு வரும்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முக்கிய பேச்சுக்களுக்காக நேற்று மாலை புதுடில்லி சென்றுள்ளார்.

கர்நாடக அரசு 9 ஆயிரம் கோடி ரூபாயில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிய அணை கட்ட முடிவு செய்துள்ளது. கர்நாடக அரசின் இந்த மேகதாது அணை திட்டத்திற்கு தமிழக அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த விவகாரத்தில், இரு மாநில அரசுகளும் தங்களின் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றன.

இந்த சூழலில், தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி தலைவர்கள் அடங்கிய குழு புதுடில்லி புறப்பட்டு சென்றது. இந்த குழு



தமிழக அமைச்சர் துரைமுருகன் தலைமையில் மத்திய நீர்வளத் துறை அமைச்சரை நேரில் சந்தித்து முறையிட்டது. அவர்களைத் தொடர்ந்து கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா டில்லி செல்கிறார். அவர் பிரதமரை நேரில் சந்தித்து மேகதாது திட்டத்திற்கு விரைவாக அனுமதி வழங்குமாறு எடியூரப்பா கோரிக்கை விடுத்ததாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக நேற்று மாலை டில்லி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு இரண்டாவது முறையாக மு.க.ஸ்டாலின் டில்லி செல்கின்றார்.

இன்று நண்பகல் 12 மணிக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்தை சந்தித்து பேச இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்தை மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேச உள்ளாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக உள்ளாட்சி மன்ற தேர்தல்கள் இவ்வருட இறுதிக்குள் நடைபெறும்

## நகராட்சி நிர்வாக அமைச்சர் கே.என்.நேரு தகவல்

சென்னை, ஜூலை 19

தமிழகத்தில் நடப்பு ஆண்டு இறுதிக்குள் நகராட்சிகளுக்கான உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என்று நகராடசி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் புதிதான பிரிக்கப்பட்ட 9 மாவட்டங்களை தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. அதன்பிறகு தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற்றதை தொடர்ந்து மீதமுள்ள மாவட்டங்களுக்கு உள்ளாட்சி தேர்தல் குறித்து எவ்வித அறிவிப்பும் வெளியாகாமல் இருந்தது.



இந்நிலையில், நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலையில், வரும் செப்டம்பர் 15 ஆம் திகதிக்குள் விடுபட்ட மாவட்டங்களுக்கு உள்ளாட்சி தேர்தல் மற்றும் நகராட்சி அமைப்புகளுக்காக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், உள்ளாட்சி தேர்தல் நடத்துவது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதை தொடர்ந்து சென்னையில் நேற்று செயதியாளர்களை சந்தித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தமிழகத்தில் டிசம்பர் இறுதிக்குள் உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என்று கூறியுள்ளார்.

# கம்மன்பில மீதான நம்பிக்கையில்லா பிரேரணையை சுதந்திர கட்சி ஆதரிக்காது!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 19
அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி விரிவான பேச்சுக்களை நடத்தவில்லை என்றாலும், எதிர்க்கட்சிக்கு ஆதரவாக ஒரு முடிவினை எடுக்கப் போவதில்லை என்று சுற்றுச் சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு அவருடையதல்ல, அது அமைச்சரவை எடுத்த முடிவு.

எனவே, இந்த முடிவுக்கு அமைச்சர் கம்மன்பில மட்டும் பொறுப்பேற்க முடியாது. ஏனெனில், இது ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன்னிலையில் எடுக்கப்பட்டது என்றும் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார். (ஐ)

# அத்தியாவசிய உணவுபொருட்களின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை!

## நிதியமைச்சர் பஸில் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 19**
**அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலையை குறைப்பது எமது முதற்கட்ட செயல்பாடாக அமையும் எனத் தெரிவித்த நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இதற்கு அனைத்து தரப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மூன்று வேளையும் உணவை பெற்றுக் கொள்ள வசதியில்லாத மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பல்வேறு எதிர்பார்ப்பிற்கு மத்தியில் மக்கள் ஆட்சியதிகாரத்தை கையளித்துள்ளார்கள்.

ஆகவே அரிசி உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

நிதியமைச்சருக்கும், உள்ளூராட்சிமன்ற பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் இடம் பெற்ற போதே பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## கீரிமலை ஜனாதிபதி மாளிகை!

# இந்திய தரப்பிடம் வழங்க 3 பரிந்துரைகள் சமர்ப்பிப்பு!

## இரு பரிந்துரைகள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
350 கோடி ரூபாய் செலவில் கீரிமலையில் நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையை இந்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு வடக்கை சேர்ந்த சில முக்கியஸ்தர்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறு இந்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும்போது ஜனாதிபதி மாளிகையை வினைத்திறனான வழியில் பயன்படுத்துவதற்காக மூன்று பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகமாக அதனை மாற்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், இந்த மாளிகை யாழ்.நகருக்கு வெளியில் அமைந்திருப்பதால் அந்தக்கோரிக்கையை இந்திய தரப்புக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறியமுடிகின்றது.

இதனையடுத்து இரண்டாவதாக உயர்தர சுற்றுலா விடுதியொன்றை அமைக்கும் வகையில் இந்திய முதலீட்டாளர்களை மையப்படுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரப்பட்டது. எனினும், யாழில் அமைக்கப்பட்டுள்ள கலாசார நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர் அதன் சுமூகமான நிர்வாகத்தை உறுதி செய்த பின்னரே இந்த விடயத்தை கையில் எடுக்க முடியும் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மூன்றாவதாக இந்த மாளிகையை இந்தியாவின் அனுசரணையுடன் சமுத்திர மற்றும் கடல்சார் கற்கை நிலையமாக மாற்றும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்தியாவின் தென்பிராந்திய கடற்பாதுகாப்பினையும் உறுதி செய்யும் வகையிலான மூலோபாய நிலையமாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும் , இந்தியத் தரப்பிலிருந்து இதுவரையில் எவ்விதமான உத்தரவாதங்களும் அளிக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரக தகவல்களின்படி இந்த விடயத்தில் அதீத கரிசனைகள் கொள்ளப்படவில்லை என்பதையே வெளிப்படுத்தியிருக்கின்றன.

இதேவேளை குறித்த ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டிருக்கும் காணிகளுக்குச் சொந்தமான இரு உரிமையாளர்களும் குறித்த நிலங்களை தங்களின் அனுமதியின்றி வெளியாருக்கு குத்தகைக்கோ அல்லது இதர உடன்படிக்கைகள் ஊடாக வழங்குவதை அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவ்விதமான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் நீதிமன்றத்தை நாடவுள்ளனரெனவும் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் பதவி விலகுகிறார்!



வடமராட்சி, ஜூலை 19
வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன் என்று கோணலிங்கம் கருணானந்தராசா, தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்டோருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து எதிர்வரும் 31ஆம் திகதியுடன் விலகுகிறார் என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர் அந்தக் கட்சியின் நகர சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சியை எம். கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் ஆரம்பித்த நிலையில் அவர்களுடன் இணைந்து செயல்படுவதால் தமிழ் அரசுக் கட்சி அவரை வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து நீக்க முயற்சித்தது. எனினும் அது பின்னர் கைவிடப்பட்டது.

தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நகர சபைத் தலைவராகத் தொடர விரும்பாமையால் தான் பதவி விலகுகிறார் என்று என்று கோணலிங்கம் கருணானந்தராசா தெரிவித்தார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிறை திரும்பினார் ரஞ்சன்!

கொழும்பு, ஜூலை 19
முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்காக சத்திர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிகிச்சையின் பின்னர் அங்குன கொலபலஸ்ஸ சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாருமான (நிர்வாக) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

# லண்டனிலிருந்து வந்தவர் கொரோனா தொற்றால் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 19
லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிய மருத்துவர் ஒருவர் மாரடைப்பு - கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

அச்சுவேலி - தோப்பு பகுதியை சேர்ந்த சிற்றம்பலம் இராசலிங்கம் (வயது-80) என்பவரே, இவ்வாறு உயிரிந்தவர் ஆவார்.

இவர், லண்டனில் இருந்து கடந்த ஜூன் 29ஆம் திகதி அச்சுவேலிக்கு திரும்பியிருந்தார். மாரடைப்பு காரணமாக, கடந்த வெள்ளிக்கிழமை அவர் வீட்டில் உயிரிழந்தார். அவர் முன்னாள் அச்சுவேலி வைத்தியசாலை அத்தியட்சகர் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அவரின் சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்கு தொற்று இருந்தமை உறதிப்படுத்தப்பட்டது.

பொலிஸ் விசாரணைகளின் பின்னர் அவரது சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின்தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 843 பேர் நேற்று குணமடைந்தனர்!

கொழும்பு, ஜூலை 19
நாட்டில் மேலும் 843 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று முன்தினம் வீடு திரும்பினர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன .

இதன்படி 2 இலட்சத்து 56 ஆயிரத்து 676 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதேவேளை, நேற்று முன்தினம் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 31 பேர் உயிரிழந்தனர். இதனால், மொத்த மரணம் 3 ஆயிரத்து 733ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# 2250 கர்ப்பவதிகளுக்கு கொரோனா தொற்று!

## பைசர் தடுப்பூசி வழங்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19
நாட்டில் இதுவரை 2,250 கர்ப்பவதி தாய்மார்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 13 கர்ப்பவதித் தாய்மார்கள் உயிரிழந்தனர் என்று குடும்ப நல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக சிகிச்சை பெறுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, கர்ப்பவதி தாய்மார்களுக்கு பைஸர் மற்றும் மொடேர்னா தடுப்பூசிகளை வழங்குவது குறித்து ஆராயுமாறு குடும்ப நல சுகாதார பணியகம், சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன் வைத்துள்ளது. (ஐ)

# கட்டாக்காலி மாடுகள் நானாட்டானில் உயர்வு

## விபத்துக்களும் அதிகரிப்பு

மன்னார், ஜூலை 19

மன்னார் - நானாட்டான் பிரதேச சபையின் எல்லைக்குள் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன. வீதிகளில் மாடுகள் திரியும் மாடுகளால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்றும் நானாட்டான் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் நானாட்டான் சுற்று வட்ட பகுதி மற்றும் பிரதான வீதிகளின் கட்டாக்காலி மாடுகள் நடமாடுவதால் அதிகளவு விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகின்றது. ஆனாலும் குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று மக்கள் சாடியுள்ளனர்.

வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளை அகற்ற விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அக்கராயன் காட்டில் எறிகணைகள் மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் 4 மோட்டர் எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது இவை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த செல்களை நீதிமன்றின் அனுமதியுடன் செயலிழக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இரணைதீவு பாடசாலை புனரமைப்பு

# ஆய்வுக்காக சென்றவர்களை திருப்பியனுப்பியது கடற்படை!

கிளிநொச்சி, ஜூலை 19

பூநகரி -இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் புனரமைப்பு பணிகளுக்காக சென்றவர்களை கடற்படை மறித்து திருப்பி அனுப்பியுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி எவரையும் அங்கு அனுமதிக்க முடியாது என்று கடற்படை தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவையாவன,

இரணைதீவு மக்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் வசித்து வந்தனர். இந்த நிலையில், 2018 ஆம் ஆண்டு அவர்கள் நடத்திய தொடர் போராட்டத்தின் பின்னர் தங்கள் சொந்த இடத்தில் அவர்கள் மீளக்குடியேறினர்.

ஆனாலும், கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக அவர்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையே நீடிக்கிறது. இந்நிலையில், இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் புனரமைப்பதற்கு 74 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 14.07.2021 இல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 12.10.2021 இல் நிறைவு பெறும் வகையில் இந்தப் புனரமைப்பு பணிகள் இடம்பெற வேண்டும்.

இதற்காக கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிமனை தொழிநுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தக்காரர் உள்ளிட்ட குழுவினர் இரணைதீவுக்கு செல்வதற்காக இரணைமாதாநகர் கடற்கரைக்கு சென்றனர்.

ஆனால், அவர்களை மறித்த கடற்படையினர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி இரணைதீவுக்கு எவரையும் அனுமதிக்க முடியாது எனக் கூறித் திருப்பி அனுப்பி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# முல்லைத்தீவில் வாள்வெட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்!

முல்லைத்தீவு, ஜூலை 19

இனந்தெரியாத குழுவினர் நடத்திய வாள்வெட்டு தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம், கரும்புள்ளியான் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அந்த இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா யாதவராசா (வயது 43) என்பவரே படுகாயங்களுக்கு இலக்கானார்.

படுகாயமடைந்தவர், மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மாகாண சபையை தமிழர் இழந்தால்

# மீண்டும் பூச்சியத்திலிருந்தே ஆரம்பிக்கவேண்டி ஏற்படும்!

## சித்தார்த்தன் எம்.பி. எச்சரிக்கை



வவுனியா, ஜூலை19

மாகாண சபை மாத்திரமே தமிழ் மக்கள் மத் தியில் இருக்கக்கூடிய ஒரேயொரு சட்டவாக்கம். அதுவும் இல்லை என்றால் மீண்டும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்கும் ஒரு நிலைமை உண் டாகும்.

எனவே, அதனை காப்பாற்றிக்கொண்டு அதற்கான தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை கொடுக்கவேண்டும். அங்கு இறுக்கமான ஓர் அரசை உருவாக்குவதன் மூலம்தான் அதனை காப்பாற்றுவதுடன் அதிலிருந்து படிப்படியாக மேலே செல்லமுடியும். இதுதான் யதார்த்தமான விடயம் என்று பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற வீரமக்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அனைவரின் அர்ப்பணிப்புக்களும், உயிர்த்தியாகங்களும் வீண்போய் விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறது. இன்று ஒரு பின்னடைவான நிலைமைக்கு தமிழ்மக்கள் முகம் கொடுத்துள்ளனர். இதற்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஒற்றுமையின்மை மற்றும் தமிழ் கட்சிகள் பல கட்சிகளாக பிரிந்து நின்று மாறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றமை, அரசாங்கத்துக்கு மிகவும் சாதகமாக அமைகின்றது.

கட்சிகள் ஒற்றுமையாக இருந்தால் இனம் ஒற்றுமையாக இருக்கும் என்ற அடிப்படையில் நாம் பல முயற்சிகளை எடுத்திருக்கிறோம். அவைகள் மக்களின் விடுதலையை விரும்புகின்ற அல்லது நேசிக்கின்ற அடிப்படையில் எடுக்கப்பட்டவையாக கடந்தகாலங்களில் இருக்கவில்லை. கூடுதலான ஒற்றுமை முயற்சிகள் தேர்தலை அடிப்படையாக கொண்டிருந்த காரணத்தால்தான் அவை பிரிவை நோக்கிச்செல்கின்றன.

கூட்டமைப்பானது பலம் வாய்ந்த அமைப்பாக இருந்த நிலையில் தற்போது பலவீனமடைந்து வரும் நிலையை பார்க்கிறோம். அது பலவீனமடைகின்றபோது தமிழினமும் பலவீனமடைகின்றது. வட, கிழக்கில் அரசாங்கத்துக்கு சார்பான 6 பேர் பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர். இது ஒரு பின்னடைவை கொடுக்கக்கூடிய விடயமே. எனவே, மக்கள் சரியாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

சில தவறுகள் காரணமாகவே கூட்டமைப்பில் இருந்து பலர் பிரிந்துசென்றனர். அவர்களை மீளவும் உள்வாங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். அந்த முயற்சிகளை தொடர்ந்து நாம் எடுக்கின்றோம். ஆனால், தமிழ் மக்கள் விடயத்தில் எமக்குத்தான் அதிகம் தெரியும் என்றவாறான அபிப்பிராயங்களை ஊடகங்கள் மூலமாக கூறி குழப்பங்களை தொடர்ந்து வைத்திருக்கிறோம். இது ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு சாதகமாக அமைந்திருக்கின்றது.

மாகாண சபையை இயங்க வைக்கக்கூடாது என்ற ஓர் எண்ணப்பாடு அரசாங்கத்தின் மத்தியில் இருக்கிறது. காலப்போக்கில் அதனை மறந்துவிடும் நிலைமையை உருவாக்கி அந்த முறைமையே இல்லாமல் ஆக்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றது. மாகாண சபை மாத்திரமே தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஒரேயொரு சட்டவாக்கம். அதுவும் இல்லை என்றால் மீண்டும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்கும் ஒரு நிலைமை உண்டாகும். எனவே, அதனை காப்பாற்றிக்கொண்டு அதற்கான தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டும். அங்கு இறுக்கமான ஓர் அரசை உருவாக்குவதன் மூலம்தான் அதனை காப்பாற்றுவதுடன் அதிலிருந்து படிப்படியாக மேலே செல்லமுடியும். இதுதான் யதார்த்தமான விடயம் - என்றார்.

## வன்னி மாவட்டத்திற்கு

# சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக வன்னி மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட 5 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம் மற்றும் திருகோணமலை ஆகிய 5 மாவட்டங்களுக்கே சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலையின் போது அவதானத்துடன் செயற்படுமாறு மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். இடி, மின்னல் தாக்கங்களின்போது மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுமாறும் வானிலை அவதானிப்பு நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# 250 கடல் அட்டை பண்ணைகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் அனுமதி!

## அமைச்சர் டக்ளஸின் உத்தரவில் வழங்கப்பட்டது

கிளிநொச்சி, ஜூலை 19

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நெறிப்படுத்தலில் சுமார் 300க்கும் அதிகமான கடல் அட்டைப் பண்ணைகள் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் நிருபராஜ் தெரிவித்துள்ளார். இதில், கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் தற்போது 250 இற்கும் அதிகமான கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர், இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 50 கடலட்டைப் பண்ணைகளுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தன. டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் அது இப்போது 300ஐக் கடந்து உயர்ந்துள்ளது.

இவற்றுள் பெரும்பாலானவைக்கு முழு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு விட்டது. தழுவல் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஏனையவற்றுக்கும் முழு அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்று தெரிவித்த அவர், இதனால், கடலட்டைப் பண்ணை முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தழுவல் அனுமதிகளை வழங்கி, துரிதமாக கடலட்டைப் பண்ணைச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வழிசெய்திருப்பதாகவும், அவர் தெரிவித்தார். (ஐ)



## ஜேர்மனியில் கொரோனா கட்டுப்பாடு தளர்வு; கம் நகரில் காமாட்சி அம்மன் தேரில் பவனி

கம், ஜூலை 19

ஜேர்மனியில் கம் நகர காமாட்சி அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. தேர்த்திருவிழா அண்மையில் சுகாதார விதிகளுக்கு அமைய அனுமதிக்கப்பட்ட 700 இருந்து 800 பேர் கலந்து கொண்டனர். (1000 பேருக்கு அரசினால் அனுமதி வழங்கப்பட்டது.)

மறுநாள் தீர்த்தோற்சவம் ஆலயம் அருகில் உள்ள ஆற்றங்கரையில் இடம்பெற்றது. தேர், தீர்த்தம் என ஆலய பூசைகள் அனைத்தையும் ஆலய ஆதினகர்த்தா சிவசிறீ பாஸ்கரகுருக்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

ஐரோப்பாவில் இருந்து வருடாந்த உற்சவத்தில் 20ஆயிரத்துக்கும் மேல் கலந்து கொள்ளும் இவ்வாலயம் கொரோனா தொற்று சூழலினால் மட்டுப்படுத்தப்பட்ட மக்களே கலந்து கொண்டனர்.

# 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



**கொழும்பு, ஜூலை 19**

**12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குபடுத்துகைகள் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண அறிவித்துள்ளார்.**

நாட்டிலுள்ள 60 வயது, 30 வயது மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும், திட்டத்தின்படி 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசிகளுக்கான நிதியொதுக்கீட்டில் அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை என்று கூறப்படுவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதிக்கமைய அபிவிருத்தி யடைந்த நாடுகள் பின்பற்றும் செயல்முறைகளையே பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்ட அவர், தடுப்பூசி ஏற்றலின் மூலம் அரசாங்கம் எவ்வித சுயலாபத் தையும் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## கொள்ளுப்பிட்டியில் போக்குவரத்து மட்டுப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 19

கொள்ளுப்பிட்டி - உத்தரானந்த மாவத்தை மற்றும் ரொட்டுன்ட பூங்கா வீதியில் இன்று திங்கட்கிழமை காலை 06 மணி முதல் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தித் திட்டம் காரணமாக ஏற்படக்கூடிய வாகன நெரிசலைக் குறைப்பதற்காக குறித்த வீதியில் ஒரு வழி போக்குவரத்து முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கிணங்க, ரொட்டுன்ட சந்தியில் ஆரம்பமாகும் உத்தரானந்த மாவத்தை பகுதியில் அப்துல் மாக்கன் மாக்கர் மாவத்தை நோக்கிச் செல்லும் வாகனங்கள் மாத்திரமே பயணிக்க முடியும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

எக்காரணம் கொண்டும் அப்துல் மாக்கன் மாக்கார் மாவத்தையில் இருந்து உத்தரானந்த மாவத்தை பகுதிக்கு வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

அத்துடன், சென். ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் இருந்து பெரஹர மாவத்தைக்கு பிரவேசிக்கும் வாகனங்கள் ரொட்டுன்ட சுற்றுவட்டம் நோக்கிப் பயணிக்க முடியாது.

எனவே, மாற்றுவீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் சாரதிகளை அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

## சித்திரவேலாயுதர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தம் இரத்து!

திருக்கோவில், ஜூலை 19

வரலாற்று பிரசித்தி பெற்ற தேசத்து கோயிலான திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆடி அமாவாசை உற்சவம் இவ்வருடம் இடம்பெறாது என ஆலயத்தின் தலைவர் எஸ்.சுரேஸ் நேற்று தெரிவித்தார்.

தீர்த்தோற்வசம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் முகமாக ஆலய மண்டபமொன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆலயத்தின் பெருந்திருவிழா பொத்துவில் தொடக்கம் நீலாவணை வரையான 15 கிராம மக்களின் திருவிழாவாகும். இதனை சுகாதார விதிமுறைகளுக்கு உட்பட்டு 30 பேருடன் நடத்துவது என்பது சாத்தியமற்றது.

இதனால், இம்முறை திருவிழாவை இரத்துச் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)



## ஆரிய குளத்தை புனரமைத்து அழகுபடுத்தும் பணி ஆரம்பம்

### முதல்வர் தலைமையிலான குழு ஆய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

தனியார் ஒருவரின் அனுசரணையில் யாழ். நகரின் மதியிலுள்ள ஆரிய குளம் புனரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்படவுள்ளது.

ஆரியகுளத்தை புனரமைத்து - அழகுபடுத்தி மக்கள் மனங்கவர் பகுதியாக மாற்றுவற்காக யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் எடுத்த முயற்சிக்கு அமையவே இந்த செயல்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆரிய குளத்தை அழகுபடுத்தல் தொடர்பில் ஆரம்பகட்ட பணிகளான வடிவமைப்பு, செலவின மதிப்பீடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. இதைத் தொடர்ந்து குளத்தின் கட்டுமாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த செயல்திட்டம் தொடர்பில் ஆராய்வற்கு மாநகர முதல்வர், ஆணையாளர், பொறியிலாளர், திட்டமிடல் பகுதி அதிகாரிகள் மற்றும் இறைவரி திணைக்களக அதிகாரிகள் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தனர். (ஐ- 3)



## நல்லூரில் நகைகள் திருட்டு சந்தேகநபர் நேற்று கைது

யாழ்ப்பாணம், ஜூலை 19

நல்லூர் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வீட்டில் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளைத் திருடிய சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட நகைகளில் பெரும்பாலானவை சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள ஆசிரியரின் வீட்டில் கடந்த 4ஆம் திகதி நகைகள் திருடப்பட்டன. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் நாவற்குழியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 7 பவுண் தாலிக்கொடி, நெக்லஸ், ஒரு பவுண் அளவுடைய 3 சங்கிலிகள், 3 சோடி தோடுகள், ஒரு மூக்குத்தி, 2 மோதிரங்கள், பெறுமதி வாய்ந்த அலைபேசி ஒன்று மற்றும் 2 பவுண் தங்க நகையை விற்பனை செய்த சிட்டை என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ - 3)

## மிருகக்காட்சிசாலையில் 4 குரங்குகளுக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 19

தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலுள்ள இரு சிம்பன்சி குரங்குகள் மற்றும் இரு ஒரங்குட்டான் இன குரங்குகளுக்கு கோவிட் 19 வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த விலங்குகளின் நடத்தைகள் மற்றும் உணவு உட்கொள்ளும் முறைகளில் மாற்றங்கள் ஏதும் இல்லை என வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால், குறித்த விலங்குகளுக்கு கொரோனா வைரஸ் ஏற்பட்டுள்ளதா என்பதை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த நான்கு குரங்குகளும் ஏனைய விலங்குகளிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் ஏற்கனவே இரண்டு சிங்கங்களுக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. அவை இரண்டும் தற்போது குணமடைந் துள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸநாயக்க மேலும் கூறியுள்ளார். (ஐ)



> தொற்றுப் பரவலுடன் எழுந்துள்ள சுகாதார கட்டுப்பாடுகள் காரணமாக, பொது மக்களின் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமையை அடக்கி கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கங்களுக்கு கிடைத்துள்ளதா என எண்ணத் தோன்றுகின்றது.

# தனிமைப்படுத்தல் சட்டத்தினால் ஒடுக்கப்படும் போராட்டங்கள்!

சேகர்

தொழிற்சங்கங்கள் தமது உரிமைகளுக்காக குரல் கொடுப்பது, பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுவது, பதாதைகள் ஏந்தி வீதி ஊர்வலம் செல்வது போன்றன இலங்கையில் மாத்திரமன்றி, ஜனநாயகம் நிலவும் சகல நாடுகளிலும் காணக்கூடிய ஓர் உரிமையாகும்.

குறிப்பாக கடந்த ஒன்றரை வருட காலமாக நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கோவிட்-19 தொற்றுப் பரவலுடன் சுகாதார தரப்பினரால் வழங்கப்பட்டுள்ள மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் கட்டுப்பாடுகளுடன் கூடிய வழிகாட்டல்கள் காரணமாக, பெருமளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் வகையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்தவாரம் கொழும்பிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அடங்கலான குழுவினர் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டு அள்ளிச் செல்லப்படும் காட்சிகளை காண முடிந்தது. வயது முதிர்ந்த பெண்களைக் கூட இதில் அடங்கியிருந்தமை மக்கள் மத்தியில் ஒரு வித விசனத்தை தோற்றுவித்திருந்தது.

இந்நிலையில் இவர்கள் நீதிமன்றங்களால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போதும், அவர்களை பலவந்தமாக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை பொலிசார் மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறான நடத்தையை கண்டித்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அமைதியான முறையில் கோவிட் விதிமுறைகளை மீறாத வகையில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும், அவ்வாறு அனுமதியளிக்க மறுப்பது அடிப்படை உரிமைகள் மீறலாகும் மற்றும் எந்த அடிப்படையில் இவ்வாறு கைதாகி விடுதலையானவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு பலவந்தமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் போன்ற பல விடயங்களை உள்ளடக்கி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொற்றுப் பரவலுடன் எழுந்துள்ள சுகாதார கட்டுப்பாடுகள் காரணமாக, பொது மக்களுக்கு காணப்படும் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமையை அடக்கி கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கங்களுக்கு கிடைத்துள்ளதா என எண்ணத் தோன்றுகின்றது. குறிப்பாக சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் அண்மைக் காலத்தில் மீண்டும் வலுப்பெற்றுள்ள நிலையில், நாட்டுக்கு முக்கிய வருமானத்தை ஈட்டித்தரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கூட இல்லாமல் போகும் நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் இவ்வாறான ஒடுக்குமுறைகள் மேலும் அவ்வாறான தீர்மானங்களுக்கு உரமூட்டுவதாக அமைந்திருக்கும்.

நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு போதியதாக இல்லை என்பது பற்றி பெருமளவில் பேசப்படுகின்றது. இவ்வாறு அந்நியச் செலாவணியை வருமானமாகப் பெற்றுக் கொள்ளக் காணப்படும் வழிமுறைகள் இல்லாமல் செய்யப்படுமானால் நாடு மேலும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படும். அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குகூட நாட்டில் அந்நியச் செலாவணி இருப்பு காணப்படாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டு, நாடு திவாலாகும் நிலைக்கு முகங்கொடுக்கும். இந்த பாரதூரமான விடயம் தொடர்பில் அதிகாரத்திலுள்ளவர்கள் ஏன் சிந்திப்பதில்லை என்பது அவர்களின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதை உணர்த்துகின்றது.

உலகில் தொற்றுப் பரவல் ஆரம்பித்தவுடன், மனித உரிமை செயல்பாட்டாளர்களின் கருத்தின் பிரகாரம், இந்தத் தொற்றுப் பரவலைக் காரணம் காண்பித்து, அதிகாரத்திலுள்ளவர்கள் தமக்கு எதிராக குரல் எழுப்புவோரை அடக்குவதற்கும், அவர்களின் சுதந்திரத்தையும், அமைதியான சமூக இடைவெளிகளை பேணி ஆர்ப்பாட்டம் செய்வோரை அடக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் சுகாதார விதிமுறைகளை முறையற்ற வகையில் பயன்படுத்துவதாக ஐக்கிய நாடுகளின் தலைமை அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் பொறுத்தமட்டில் சுகாதார விதிமுறைகளை எடுத்துக் கொண்டால் இரண்டு வகையான சட்டம் அமலில் உள்ளதாக என எண்ணத் தோன்றுகின்றது. குறிப்பாக இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று கைதுகள் இடம்பெற்ற அதே வாரத்தில், அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் பாராளுமன்றத்தில் அங்கத்துவத்தைப் பெற்றதுடன், நிதி அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்றார். இதற்கு அவரினதும், அந்தக் கட்சியின் ஆதரவாளர்களும் பாற்சோறு பொங்கி, தானம் வழங்கி கொண்டாட்டங்களில் ஈடுபட்டதையும் இலங்கையின் பல பாகங்களில் காண முடிந்தது.

மக்கள் ஒன்றுகூடுவதற்கான தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறானதொரு அரச சார்ந்த நியமனத்துக்கு ஒன்றுகூடுவதற்கான அனுமதியை யார் வழங்கியது, அவர்களை ஏன் கைது செய்ய வில்லை? ஏன் தனிமைப்படுத்தல் முகாம் களுக்கு அவர்களை அள்ளிச் செல்ல வில்லை எனும் கேள்வி எழாமலுமில்லை. இவ்வாறு அரச சார்ந்த தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறை மீறப்படுவது இது முதன்முறையல்ல. கடந்த காலங்களில் மரணச் சடங்குகள் கூட அரச பிரச்சாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டதை காண முடிந்தது.

வரலாற்றை எடுத்துப்பார்த்தால், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் போன்றன நேர்த்தியான சமூக மாற்றங்களுக்கு வழிகோலியிருந்தன. அத்துடன், மனித உரிமைகளை உறுதி செய்து மேம்படுத்துவதற்கும் ஏதுவாக இருந்தன. உலகின் அனைத்து பாகங்களிலும் சிவில் சமூகத்தின் உரிமைகளை பாதுகாப்பதற்கு ஏதுவாகவும், உதவியாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக ஒடுக்குமுறையுடன் கூடிய ஆட்சிகள் இடம்பெறும் நாடுகளில் இவற்றை அதிகளவு காண முடிகின்றது. தகவல்கள் அறிந்த மக்களை ஈடுபடுத்தி அவற்றை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிக்கும் வகையில் போராட்டங்கள் அமைந்துள்ளன. பொது விவகாரங்களில் நேரடி பங்கேற்பை உறுதி செய்வதுடன், ஜனநாயக பிரதிநிதித்துவத்தை வலிமைப்படுத்தவும் ஏதுவாக உள்ளன.

பொதுவாக அரசாங்கம் மற்றும் பொது மக்களை எடுத்துக் கொண்டால் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் என்பது அசௌகரியத்தை ஏற்படுத்துவது அல்லது ஆபத்தை ஏற்படுத்தும் விடயங்களாக பார்க்கப்படுகின்றன. ஆனாலும், இவ்வாறான ஆர்ப்பாட்டங்களினூடாக பல்வேறு மனித உரிமைசார் அடிப்படை அம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. மனித உரிமைகளை உறுதி செய்து கொள்வதற்கு இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் அவசியமாக அமைந்துள்ளன.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதனூடாக தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்த வாய்ப்பளிப்பதுடன், அரசாங்கத்தின் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கு தமது தீர்மானங்களை மீட்டுப்பார்க்க தூண்டுவதாக அமைந்துள்ளன. இவ்வாறான போராட்டங்கள் சமூகங்களில் பாதுகாப்பான வகையில் இடம்பெறுதை உறுதி செய்யும் பொறுப்பு சிவில் சமூக அமைப்புகள், செயற்பாட்டாளர்கள், மனித உரிமை காவலர்கள், சட்டத்தரணிகள், நீதவான்கள், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், பொது அதிகாரிகள் மற்றும் இதர பங்காளர்களைச் சேரும்.

அரசாங்கத்துக்கு எதிரான இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் பலவந்தமாக ஒடுக்கப்படுவதன் மூலம், அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சரியானது என்பதை உணர்த்திவிட முடியாது என்பதுடன், அரசுக்கு ஆதரவான கொண்டாட்டங்களை முன்னெடுப்பதை அனுமதிப்பது, அரசின் வெற்றியை குறிப்பதை உணர்த்தவும் முடியாது. இங்கு நடப்பது அனைத்தையும், அங்கிருப்பவர்கள் (உதவி வழங்கும் சர்வதேச அமைப்புகள்) பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மனித உரிமைகளுக்கு அவ்வாறான அமைப்புகள் அதிகளவு முக்கியத்துவம் வழங்குகின்றன. இந்நிலையில் நாளையை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களின் தேவையை மறந்து இவ்வாறான அடக்கு முறைகளை கையாள்வதை பற்றி மீளச் சிந்திக்க வேண்டும். ▮

# பருவநிலை மாற்றம்: வெள்ளத்தையும், வெப்பத்தின் தீவிரத்தையும் முன்கூட்டியே கணிக்க தவறிய அறிவியல்

ரோஜர் ஹர்ராபின்

ஜேர்மனி வெள்ளப்பெருக்கையும், வட அமெரிக்காவில் வீசிய வெப்ப அலையையும் கணிக்கத் தவறிவிட்டதாக முன்னணி சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டனர்.

ஆனால், புவி வெப்பநிலை வேகமாக அதிகரிப்பது நாசம் விளைவிக்கும் வெப்ப அலைகளையும், பெரு வெள்ளத்தையும் கொண்டுவரும் என்று பல பத்தாண்டுகளாக சரியாகவே எச்சரித்து வந்தனர்.

ஆனால், அது போன்ற வானிலை சீற்றங்களின் தீவிரத்தை துல்லியமாக முன் கணிக்கும் அளவுக்கு தங்கள் கணினிகள் வலிமையானவை அல்ல என்று அவர்கள் கூறுகின்றனர்.

உலக நாடுகள் தங்களுக்குள் பொதுவாக பருவநிலைக்கான சுப்பர் கணனியை நிறுவ கூட்டாக செலவிடவேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

பருவநிலை மாற்றம், வானிலை ஆகியவற்றை முன் கணிக்க கணனிகள் மிக முக்கியமானவை.

பருவநிலை மாற்றத்துக்கான நாடுகளிடையிலான குழு (IPCC), பருவநிலை மாற்றம் தொடர்பாக கூறும் கருத்துகளுக்கு கணினிகள் உருவாக்கும் கணக்கீடுகளே வலுவான அடிப்படையை வழங்கும்.

ஐ.பி.சி.சி. குழு உருவாக்கும் பருவநிலை தொடர்பான கணனி மாதிரிகள் சிறப்பானவை அல்ல என்று எச்சரிக்கிறார் பிரிட்டனின் முன்னாள் வானிலை மைய முதன்மை அறிவியலாளர் பேராசிரியர் டேம் ஜூலியா ஸ்லிங்கோ.

பி.பி.சி. நியூசிடம் பேசிய அவர் தீவிர வானிலைகளை உருவாக்கும் இயற்பியல் விதிகளை புரிந்துகொண்டு பருவநிலை மாதிரிகளை உருவாக்குவதில் தீவிர பாய்ச்சலை ஏற்படுத்துவதற்கு ஒரு சர்வதேச மையம் தேவை என்று அவர் கூறினார். “அதை செய்யாவிட்டால், முன்னெப்போதும் இல்லாத வகையில் தொடர்ந்து வேகம் காட்டும் தீவிர வானிலைகளை நாம் குறைவாக மதிப்பிடுவது தொடரும்” என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தயார் நிலையில் இல்லாதபோது சமூகம் சந்திக்க நேர்கிற தீவிர வானிலைகளால் ஏற்படும் இழப்புகளை ஒப்பிடும்போது அந்த கணினிகளை உருவாக்க செலவிட வேண்டிய பல நூறு கோடிகள், ஒன்றுமே அல்ல என்றும் அவர் கூறுகிறார்.

நவம்பரில் நடக்கவுள்ள COP26 பருவநிலை உச்சிமாநாட்டில் இதற்கான ஒரு முன்னெடுப்பை டேம் ஜூலியா மேற்கொள்வார்.

அவரும் மற்ற பிற விஞ்ஞானிகளும், பருவநிலை மாற்றம் ஒரு அவசர நிலை என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், எந்த அளவுக்கான அவசரநிலையில் நாம் இருக்கிறோம் என்பதை சொல்ல முடியாது. காரணம், அதை அளவிடுவதற்கான கருவிகள் நம்மிடம் இல்லை என்கிறார் ஒக்ஸ்போர்ட் பேராசிரியர் டிம் பால்மர்.

“கனடாவில் ஏற்பட்ட வெப்ப அலைகளைப் போன்றவற்றை நாம் துல்லியமாக முன் கணிக்க வேண்டுமானால், ஐரோப்பிய அணுக்கரு ஆராய்ச்சிக் கழகத்துக்கு (CERN) உள்ளதைப் போன்ற பெரிய லட்சியமும் அர்ப்பணிப்பும் தேவை என்கிறார் அவர்.



ஐரோப்பிய வெள்ளம்

வட அமெரிக்காவோ, ஜேர்மனியோ இந்த ஆண்டு எதிர்கொண்டதைப் போன்ற வெப்ப அலைகளையும், கடும் வெள்ளத்தையும் அல்லது அது போன்ற தீவிர வானிலையையும் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்திக்க வேண்டியிருக்குமா, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அப்படி வருமா, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையா? இல்லை ஆண்டுதோறும் வருமா? என்பதை ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடவேண்டும். இந்த அளவுக்கான துல்லிய மதிப்பீடு இப்போதுள்ள நிலையில் சாத்தியமில்லை.

பருவநிலை மாற்றம் எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதைப் பற்றி ஐ.பி.சி.சி.கூறும் என்று காத்துக்கொண்டிருப்பது வீண் வேலை என்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

காரணம், பருவநிலை மாற்றம் தொடர்பான எல்லா அறிவையும் ஓரிடத்தில் குவித்து திரட்டி அது வெளியிடும் அறிக்கை, அது வெளியிடப்படும்போது காலாவதியான தகவலாக இருக்கும்.

“நமது ஸ்திரமான பருவநிலை சிதையும் வேகம் அதிகரிப்பது நிரூபிப்பது என்னவென்றால், பருவநிலை அவசரநிலை என்று வரும்போது நாம் மோசமான நிலையில் இருக்கிறோம்” என்று யூ.சி.எல். ஏர்த் சயின்சஸ் நிறுவனத்தை சேர்ந்த பேராசிரியர் பில் மெக் குயிர் கூறினார்.

ஐ.பி.சி.சி. அறிக்கைகள் மிகவும் மிதமானவை, கருத்தொற்றுமையின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறவை. ஐபிசிசி ஆவணங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாத சக அறிஞர்களால் மதிப்பிடப்பட்ட பல ஆய்வேடுகள் மோசமான நிலைமைகள் உருவாகும் வாய்ப்பு பற்றிப் பேசுகின்றன. நல்லது நடக்கும் என்பதற்கான நம்பிக்கையில் நாம் இன்னும் இருக்கும்போது, நாம் ஏன் மோசமான நிலைமைகளுக்கு தயாராக வேண்டும்? ஏன் கருத்தொற்றுமையால் எட்டும் நிலைப்பாடு மட்டுமே சரியாக இருக்கும் என்று நினைக்கவேண்டும்? என்கிறார் அவர்.


பருவநிலையைவிட மெதுவான வேகத்தில் செயல்படுகிறது ஐ.பி.சி.சி. என்பது நன்கு அறிந்த விஷயம் என்கிறார் கேம்பிரிட்ஜ் பேராசிரியர் மைக் ஹூல்மே.

“பக்குவப்படவும், நிச்சயமற்ற தன்மையை பொருத்திப் பார்க்கவும் அறிவியல் காலம் எடுத்துக்கொள்ளும். வெளியிடப்படுவதற்கு முன்பாகவே ஐபிசிசி அறிக்கைகளை ஆட்கள் குறைத்து மதிப்பிட முயல்வது ஆபத்தானது” என்கிறார் அவர்.

“தீவிர வானிலை நிகழ்வுகள் ஏற்படுகின்றன என்பது உண்மை. வெப்ப அலைகள், தீவிர சூறாவளிகள் போன்ற சில நிகழ்வுகள் மிக மிக தீவிரமடைகின்றன. ஆனால், இவற்றை ஐ.பி.சி.சி. மாதிரிகளைக் கொண்டு கணிக்க முடியும்” என்கிறார் ஹூல்மே.

இதனிடையே ஐபிசிசி மாதிரிகளில் உள்ள ஓட்டைகள் என்று தாம் கருதுகிறவற்றை அடைக்க பருவநிலை மாற்ற ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்தார் பிரிட்டன் அரசாங்க முதன்மை விஞ்ஞானி பேராசிரியர் சர் டேவிட் கிங். ■

**“ வட அமெரிக்காவோ, ஜேர்மனியோ இந்த ஆண்டு எதிர்கொண்டதைப் போன்ற வெப்ப அலைகளையும், கடும் வெள்ளத்தையும் அல்லது அது போன்ற தீவிர வானிலையையும் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்திக்க வேண்டியிருக்குமா, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அப்படி வருமா, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையா? இல்லை ஆண்டுதோறும் வருமா?**



ஜூன் மாதம் பாகிஸ்தான் லார்கானாவில் ஏற்பட்ட வெப்ப அலையின்போது தங்களை குளிர்வித்துக்கொள்ள நீரில் கிடக்கும் மாடுகள்.

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் - 45 நிமிடம்


- **கீழே தரப்பட்டுள்ள உருக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.**

1.



(1) (2) (3)


2.



(1) (2) (3)


- **தரப்பட்டுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

3.



(1) (2) (3)

4.



(1) (2) (3)

## வினாத்தாள் - II இற்கான விடைகள்

**01.** 1) காலைக்காட்சி 2) வண்ண வண்ண, சுற்றிச் சுற்றி
3) "தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல் போல" / சிறுவர்களைப் போன்று
4) வாசம் 5) ரீங்காரம் + இடும் 6) சிறுவர்களை, பெரியவர்களை (6 புள்ளிகள்)

**02.** புள்ளிமான் தண்ணீர் குடிப்பதற்காக ஏரிக்குச் சென்றது. (1 புள்ளி)

**03.** i) நீளம் ii) கரைக்கு (2 புள்ளிகள்)

**04.** 1) அந்தப்பாறையில் குரங்கு, மான், சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன
2) ஐயா! பேருந்து நின்று விட்டதே. (2 புள்ளிகள்)

**05.** 1) யானை ஆடி அசைந்து வந்தது. (1 புள்ளி)

**06.** 1) "கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்"
2) அடர விதைத்து சிதறப் பிடுங்க வேண்டும். (2 புள்ளிகள்)

**07.** 1) சக்கரவர்த்தி

**08.** 1) ஒருவர்க்குச் 2) எழுத்துப் (2 புள்ளிகள்)

**09.** 1) தபாற் பெட்டி இலக்கம் 2) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**10.** 1) மறைவான தன்மை (1 புள்ளி)

**11.** 1) ✓ 2) ✗ 3) ✗ 4) ✓ (4 புள்ளிகள்)

**12.** பொருத்தமான வாக்கியம்

**13.** i) Flower ii) Kite iii) This is my father iv) That is my car
v) உங்களுக்கு எத்தனை வயது vi) அவை எனது பேனைகள் (6 புள்ளிகள்)

**14.** i) புகையிரத நிலையம் ii) தேநீர் குடியுங்கள் iii) விதுஹல்பதி iv) பகளொவ (4 புள்ளிகள்)

**15.** i) எண்பத்தேழாயிரத்து ஐந்நூற்றுப் பத்து. ii) 10000+ 0000 + 500 + 70 + 8 (2 புள்ளிகள்)

**16.** 21 **17.** i) 12 ii) 0 **18.** vii, xii, xv, xx **20.** i) 0.3 ii) 02 கட்டங்கள்

**21.** 42 மாத்திரைகள் **22.** **23.** 9.50, 22.00, 43.00, 7.25

**24.** 105 புத்தகங்கள் **25.** 50ml

**26.** i) 25, 36 ii) 11, 13 **27.** i) பி.ப. 3.15 நிமிடங்கள் ii) 15:15 **28.** 500ml

**29.** 35 mm **30.** i) 5 ii)

**31.** 3, 10 (2) **32.** திடசித்தம் (2) **33.** ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல் (1)

**34.** தேசிய ஒற்றுமை (3) **35.** பறங்கியர் (2) **36.** சிகிரியா (1) **37.** 1996 (3)

**38.** பிரதேச சபை (3) **39.** வேர் மூலம் (3) **40.** தக்காளி (1) **41.** நரைப்புளுணி (2)

**42.** ஊசிதாங்கி (3) **43.** தவளை (1) **44.** ISBN (1) **45.** ஏந்தனம் (2)

**46.** மருது (2) **47.** சதோச (1) **48.** கௌபி (3) **49.** தூதுவளை (1)

**50.** கொழுப்பு (2) **51.** செப்புக்கம்பி, இரும்பு ஆணி, உலர்மின்கலம் (2)

**52.** கலாநிதி ஆனந்தக் குமார சுவாமி (3) **53.** கம்களித் தையல் (2)

**54.** உழவர் பாடல் (1) **55.** ஊதா (2) **56.** ஆதர் சி. கிளார்க் (1)

**57.** வேம்பு (2) **58.** 1815 (2) **59.** சளகு (3)

**60.** கொழும்பு (2)

# இலங்கையில் சட்டமும் நீதியும் எங்கு உள்ளன?

## தேட வேண்டிய நிலைமை என்கிறார் சிறிதரன் எம்.பி.

**யாழ்ப்பாணம், ஜூலை 19**

**“இந்த நாட்டினுடைய சட்டம், இந்த நாட்டின் நீதி எங்கு உள்ளன என்பதனைத் தேடிப் பார்க்க வேண்டியுள்ளது.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**



கடலட்டை பண்ணை விவகாரம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடலட்டைப் பண்ணை உருவாக்குவது தொடர்பில் மஹிந்த அமரவீர கடற்றொழில் அமைச்சராக இருந்தபோது, 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி அரச வர்த்தமானியில் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதிலே கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களையும் விட அதிகமான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக 11 இடங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கடலட்டைப் பண்ணைக்குப் பொருத்தமான இடங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலட்டைக் குஞ்சுகளை உருவாக்குவதற்காக அரியாலையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினதும் அப்பகுதி பிரதேச செயலாளரினதும் அனுமதி பெறப்பட்ட பின்னரே இரண்டு பரப்பு காணிக்குள் கடலட்டை உற்பத்தி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனுமதி பெற்றவர்கள் அதனைத் தாண்டி கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக் கிராமமான கௌதாரிமுனைக்கு வந்து இரண்டு ஏக்கரை வலுக்கட்டாயமாகப் பிடித்துள்ளனர்.

அப்பகுதி மீனவ சங்கங்களினதும் பிரதேச செயலகத்தினதும் அனுமதி இல்லாமல் இன்னொரு நாட்டைச் சேர்ந்த நிறுவனத்தினர் இடத்தைப் பிடித்துள்ளனர்.

அதற்கு எதிராக முறைப்பாடு செய்து அறிவித்தும் இதுவரை அவர்கள் கைதுசெய்யப்படாமல் இருக்கின்றார்கள் என்றால் இந்த நாட்டினுடைய சட்டம், இந்த நாட்டின் நீதி எங்கு உள்ளன என்பதனைத் தேடிப்பார்க்க வேண்டியுள்ளது” - என்றார். (இ)

# ‘எஸ்.ரி.எவ்’பின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி ‘லலித் வசந்த’ உயிரிழப்பு

## 6 கொலை சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர்

கொழும்பு, ஜூலை 19

திட்டமிடப்பட்ட குற்றங்களுடன்தொடர்புடைய ‘லலித் வசந்த’ பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



சீதுவைப் பகுதியில் கட்டளையை மீறிப் பயணித்த அதிசொகுசு வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகனத்தில் பயணித்த நபர் மரணமடைந்தார்.

இதையடுத்து, சுமார் 6 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ‘லலித் வசந்த’ என்பவரே உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. (இ)

# தமிழர் சீனாவை எதிரியாக்குவது இப்போது ஆரோக்கியமானதல்ல

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 19

“இப்போதைய நிலைமையில் தமிழர்கள் சீனாவை எதிரியாக்குவது ஆரோக்கியமானதல்ல.”

- இவ்வாறு அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் பொதுச்செயலாளருமான சி. அ.யோதிலிங்கம் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சீனா கடலட்டை பண்ணை ஒன்றை அமைத்து கடலட்டை குஞ்சுகளை வளர்த்து வருகின்றது. அதனை ஏற்றுமதி செய்ய இருக்கின்றது.

இந்த விவகாரம் தமிழர்கள் மத்தியில் ஒரு பேசு பொருளாக உள்ளது.

இதற்குப் பல்வேறு பக்கத்தில் இருந்தும் பலமான கண்டனங்கள் எழுந்துள்ளன.

ஆனால், நாம் இந்த விடயத்தை நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது” - என்றார். (இ)

# 12 கோடி பெறுமதியான ஹெரோயினுடன் ‘கிம்புலா எலே குணா’வின் சகோதரர் கைது

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு -ஆட்டுப்பட்டித் தெருவில் 12 கோடி ரூபா பெறுமதியான 12 கிலோகிராம் ஹெரோயினுடன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், போதைப்பொருள் வர்த்தகர் ‘கிம்புலா எலே குணா’வின் சகோதரரான சுரேஷ் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திட்டமிடப்பட்ட குற்றங்களைப் புரியும் மற்றும் போதைப் பொருள் வர்த்தகரான கிம்புலா எலே குணா, இந்தியாவுக்குத் தப்பிச் சென்றபோது தமிழக கியூ பிரிவு பொலிஸாரால் சென்னை விமான நிலையத்தில் வைத்து கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பெண்ணொருவர் உட்பட மேலும் 10 பேர் ஹெரோயினுடன் கைது!

கொழும்பு, ஜூலை 19

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் பெண்ணொருவர் உட்பட 10 பேர் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மட்டக்குளி பொலிஸ் பிரிவில் கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், 25 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹெரோய்ன் வியாபாரத்தினூடாகப் பெறக்கொண்ட 8 இலட்சம் ரூபாயையும் குறித்த நபரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மட்டக் குளிபிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனேவத்த பிரதேசத்தில் பியகம பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 6 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பியகம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ்புர பிரதேசத்தில், கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 6 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 20ஆம் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 530 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமித்திபுர பிரதேசத்தில், கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 510 மில்லிகிராம் ஹெரோயினுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திட்டி பாலத்துக்கு அருகில் கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, எகொடஉயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 520 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கப்புர பிரதேசத்தில் தலங்கம பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹோக்கந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலங்கம, வத்தளை ஆகியப் பகுதிகளிலும் 7 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் 43, 55 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# கொரோனா சட்டத்தை மீறிய மேலும் 368 பேர் சிக்கினார்கள்

கொழும்பு, ஜூலை 19

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 368 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் குளியாப்பிட்டி பகுதியில் 117 பேரும், கண்டியில் 51 பேரும், கம்பஹாவில் 31 பேரும் என அதிகளவானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 50 ஆயிரத்து 749 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# ஐரோப்பாவில் குறைந்தது வெள்ளம்: துப்பரவாக்கும் பெரும்பணி ஆரம்பம்!

## 180 பேர் வரை உயிரிழப்பு!

- இறப்பு எண்ணிக்கை மேலும் உயரலாம்
- காலநிலை மாற்றமே வெள்ளத்துக்கு காரணம்
- ஏரிகள், குளங்கள் உடைப்பெடுக்கும் ஆபத்து
- ரைன் ஆறு பெருக்கெடுக்கும் அபாயம்



பெர்லின், ஜூலை 19

ஜேர்மனி, பெல்ஜியத்தில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் வடிந்து வருகின்றது. இதனால், வெள்ளம் ஏற்பட்ட பகுதியில் மிகப் பெரும் துப்பரவு பணியை மக்கள் ஆரம்பித்துள்ளனர்.

மீட்பு குழுவினர் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். வெள்ளத்தால் குறைந்தது 180 பேர் இறந்தனர். பலர் காணாமல் போயுள்ளனர். இதனால், இறப்பு எண்ணிக்கை உயரக் கூடும் என்று கூறப்படுகின்றது.

இந்தத் திடீர் வெள்ளத்துக்கு காலநிலை மாற்றமே காரணம் என்று ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் சாடியுள்ளனர்.

புவி வெப்பமடைதல் மழையை அதிகமாக்குகிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். தொழில்புரட்சி தொடங்கியதிலிருந்து புவி 1.2சி வெப்பமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மனி, பெல்ஜியத்தில் பெய்த கடும் மழை சுவிற்சர்லாந்தின் லக்சம்பேர்க், நெதர்லாந்து நாடுகளையும் இந்த வெள்ளம் பாதித்தது.

ஜேர்மனியில் மட்டும் வெள்ளத்தால் 156 பேர் இறந்தனர். இதில் நான்கு மீட்பு குழுவினரும் அடங்குவர். ஜேர்மனியில் பெய்த பலத்த மழை அடித்தளங்களையும், வீதிகளையும்கூட மாற்றி அமைத்துள்ளது.

மேற்கு ஜேர்மனியில் ஸ்டீன்பாக்டல் அணை உடைந்து போகும் அபாயத்தில் உள்ளது. இதனால் அதன் சுற்றுப்புறத்திலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நோர்த் ரைன் - வெஸ்ட்பாலியா, ரைன்லாண்ட் - பலட்டினேட், சார்லாண்ட் மாநிலங்களே அதிகம் பாதிக்கப்பட்டன. நகரத்தில் பல வணிகங்களும் வாழ்வாதாரங்களும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மின்சாரம், எரிவாயு விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளன.

பெருமளவு வாகனங்களை வெள்ளம் கொண்டுசென்று ஒதுக்கியுள்ளது. இவற்றை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கார்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த பகுதிகளில் பல உடல்கள் மீட்கப்பட்டன.

பெல்ஜியத்தில் 10 மாகணங்களில் மீட்பு பணிகளுக்கு இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது. பிரதமர் அலெக்சாண்டர் டி க்ரூ எதிர்வரும் 20 ஆம் திகதியை துக்கதினமாக அறிவித்துள்ளார். பெல்ஜியத்தில் வெள்ளத்தால் குறைந்தது 27 பேர் உயிரிழந்தனர். "நம் நாடு கண்டிராத மிகப்பெரிய பேரழிவு இது", என்று பிரதமர் கூறியுள்ளார்.

நெதர்லாந்தில் லிம்பர்க் மாகாணத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

சுவிஸில் ஏரிகள் நிறைந்துள்ளனர். தலைநகர் பேர்ண் ஊடாக ஓடும் நதி அதன் கரைகளை உடைத்துப் பாய்ந்தது. லூசர்ன் ஏரி பெருக்கெடுத்துள்ளது. ரைன் நதியின் அருகே இருப்பவர்கள் கரையிலிருந்து விலகி இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

---

## ஒன்பது மாத காலத்தின் பின் ஈபிள் கோபுரம் திறக்கப்பட்டது

பாரிஸ், ஜூலை 19

பிரான்ஸின் இரும்புச் சீமாட்டி ஈபிள் கோபுரம் நேற்று முன்தினம் முதல் மீண்டும் பார்வையாளர்களுக்காகத் திறக்கப்பட்டது.

முகக்கவசம் மற்றும் சுகாதாரப் பாஸ் என்பவற்றுடன் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் கோபுரத்தை பொதுமக்கள் பார்வையிடமுடியும். கொரோனா தொற்று நோய் நெருக்கடி காரணமாகக் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் - தொடர்ந்து ஒன்பது மாதங்கள் - கோபுரம் மூடப்பட்டிருந்தது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் இவ்வாறு கோபுரம் மிக நீண்ட காலப் பகுதிக்கு மூடப்பட்டமை இதுவே முதன்முறையாகும். பிரான்ஸில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் உணவகங்கள், பொழுதுபோக்கு இடங்களில் சுகாதார பாஸ் கட்டாயமாக்கப்பட்டிருப்பதால் ஈபிள் கோபுரத்தின் இரசிகர்களுக்கும் அது கட்டாயம் ஆகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தனித்தனியே இரண்டு பிரிவுகளாக கோபுரத்தில் ஏறுவதற்கு அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் சுமார் 70 இலட்சம் உல்லாசப் பயணிகள் கோபுரத்தைப் பார்வையிடுவது வழக்கம். கடந்த பல மாதங்களாக அது மூடப்பட்டிருந்ததால் ஏற்பட்ட மொத்த வருமான இழப்பு ஏழு கோடி யூரோக்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார், ஆயிரத்து 640 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

---



## இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிய இங்கிலாந்து அமைச்சருக்கு தொற்று

இங்கிலாந்தின் சுகாதார அமைச்சராக அண்மையில் பதவியேற்ற சஜிட் ஜாவிட் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருக்கிறார். மேலதிக பரிசோதனைகளின் முடிவை எதிர்பார்த்துள்ள அவர் தன்னை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொண்டுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

அமைச்சர் ஜாவிட் கடந்த மார்ச்சிலும் பின்னர் மேயிலுமாக அஸ்ராசெனகா தடுப்பூசிகளை இரு தடவை பெற்றிருந்தார்.

உடல் சோர்வை அடுத்தே அவர் தன்னை சுய வைரஸ் பரிசோதனைக்கு உட்பட்டுத்தினார் என்று அவரே கூறியுள்ளார். அவருக்குத் தொற்றின் அறிகுறிகள் மிகக் குறைவாக உள்ளன.

"இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றியுள்ளதால் தொற்றின் அறிகுறிகள் மோசமாக இருக்கவில்லை" என்று அவர் தனது ருவிட்டர் காணொலி பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். ஊசி ஏற்றாதவர்களை விரைவாக அதனைப் போட்டுக்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---



## மும்பையில் கடும் மழை: வீடு இடிந்ததில் 18 பேர் பலி!

மும்பை, ஜூலை 19

இந்தியாவின் மும்பை நகரில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட பாதிப்புக்களால் 22 பேர் உயிரிழந்தனர்..

மும்பை - செம்பூர் பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடும் மழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் வீடு ஒன்று இடிந்து வீழ்ந்ததில் உறங்கிக் கொண்டிருந்த 14 பேர் உயிரிழந்தனர். இன்னும் சிலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இதனால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இதேபோன்று, விக்ரோலி பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவால் 5 குடிசை வீடுகள் இடிந்து வீழ்ந்தன. இதில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். இதுபோன்று பந்தப் பகுதியில் சுவர் இடிந்ததில் ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

---

## ஹஜ் யாத்திரை ஆரம்பம் 60,000 பேருக்கே அனுமதி!

மக்கா, ஜூலை 19

இஸ்லாமியர்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகப் போற்றப்படும் ஹஜ் யாத்திரை ஆரம்பமானது. கொரோனா பெருந்தொற்றுக்கு பின்னரான இரண்டாவது ஹஜ் யாத்திரை இதுவாகும்.

இந்தப் புனித யாத்திரைக்காக இஸ்லாமியர்கள் சனிக்கிழமை முதல் மக்காவுக்கு வர ஆரம்பித்துள்ளனர். யாத்திரிகர்கள் சமூக இடைவெளியை பின்பற்றி முகக்கவசம் அணிவது கட்டாயம். இந்தமுறை ஹஜ் நிகழ்வு 2020ஐ விட பெரியது என்றபோதிலும் வழக்கத்தி லும் பார்க்க மிகச்சிறியது ஆகும்.

ஹஜ் யாத்திரரைக்காக இணையம் மூலம் 5 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்தன. இதிலிருந்து 60 ஆயிரம் விண்ணப்பங்களே அங்கீகரிக்கப்பட்டன என்று சவூதி அரேபியாவின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. 18 - 65 வயதுக்கு இடைப்பட்டவர்களும், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களும் மட்டுமே ஹஜ் பயணத்துக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்.



தொழுகையில் ஈடுபடுவதற்கு 3 மணி நேரத்துக்கு 6 ஆயிரம் பேருக்கே ஒரே தடவையில் அனுமதி வழங்கப்படுகின்றது. தொழுகை முடிந்த பின்னர், தொற்றுநீக்கம் செய்யப்பட்ட பின்னரே அடுத்த யாத்திரிகர்கள் குழு தொழுகைக்காக அனுமதிக்கப்படுகின்றது. யாத்திரிகர்கள் மக்காவின் மிகப்பெரிய பள்ளிவாசலான கஃபாவில் தொழுகையில் ஈடுபடுவார்கள். பின்னர் அருகிலுள்ள பிற புனித தலங்களில் ஐந்து நாட்களுக்கு யாத்திரையை தொடர்வார்கள்.

2019ஆம் ஆண்டு இந்த யாத்திரையில் 25 இலட்சம் மக்கள் பங்கேற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இங்கிலாந்துடனான இருபது - 20

# ஒருநாள் தொடர் தோல்விக்கு பழிதீர்த்தது பாகிஸ்தான்!

லண்டன், ஜூலை 19

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இருபது - 20 ஆட்டத்தில் லியாம் லிவிங்ஸ்டன் அதிவேக சதமடித்தும் இங்கிலாந்து அணி 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளிடையேயான முதல் இருபது - 20 போட்டி வெள்ளிக்கிழமை இரவு நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

பாகிஸ்தானின் தொடக்க ஆட்டக்காரர்களாக முகமது ரிஸ்வான், அணித் தலைவர் பாபர் அசாம் களமிறங்கினர். அசாம் ஓட்டங்களை குவிக்க ரிஸ்வான் ஒத்துழைப்பு கொடுத்தார். பவர் பிளே முடிவில் பாகிஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி 49 ஓட்டங்களை எடுத்தது.

இதே வேகத்தில் ஓட்டங்களை குவிக்க முதல் 10 ஓவர்களில் அந்த அணி விக்கெட் இழப்பின்றி 80 ஓட்டங்களை சேர்த்தது.

அசாம் 35ஆவது பந்தில் அரைசதம் எட்டினார். ரிஸ்வானும் அதிரடி காட்டத் தொடங்கி 34ஆவது பந்தில் அரைசதத்தை எட்டினார். ஓட்டவிகிதமும் 9-ஐத் தாண்டத் தொடங்கியது.

இதன்பிறகு, பௌண்ட்ரி, சிக்ஸர்களை விளாசியே இருவரும் ஓட்டங்களை குவித்தனர்.

முதல் விக்கெட்டுக்காக 150 ஓட்டங்களை சேர்த்த நிலையில் ரிஸ்வான் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். விக்கெட்கள் விழத் தொடங்கினாலும், புதிதாகக் களமிறங்கிய வீரர்களும் பந்துகளை பௌண்ட்ரி, சிக்ஸருக்கு விரட்டுவதிலேயே குறியாய் இருந்தனர்.

அஸாம் 85 ஓட்டங்களுடன் விழ, பின்னர் வந்த வீரர்களும் கைகொடுத்ததால் 20 ஓவர்களில் பாகிஸ்தான் 6 விக்கெட்களை இழந்து 232 ஓட்டங்களைக் குவித்தது.

233 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்துக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. டேவிட் மலன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ஜேசன் றோய் அதிரடி காட்டத் தொடங்கினார். ஆனால், அவருடன் இணைந்த பெயர்ஸ்ரோ 11, மொயின் அலி ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்துக் களமிறங்கிய லிவிங்ஸ்டன் சிக்ஸர்களை பறக்கவிட்டு தொடக்கம் முதலே அதிரடி காட்டினார். றோய் 13 பந்துகளில் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கப்டன் மோர்கன் துணை நிற்க, லிவிங்ஸ்டன் பௌண்ட்ரிகளாக விளாசி வெற்றிக்குத் தேவையான ஓட்டவிகிதத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவர் 17 பந்துகளில் அரைசதத்தை எட்டினார்.

இதனிடையே மார்கனும் அதிரடிக்கு மாற முயற்சித்து விக்கெட்டைப் பறிகொடுத்தார். எனினும், லிவிங்ஸ்டன் விடாமுயற்சியோடு சிக்ஸர்களைப் பறக்கவிட்டு இங்கிலாந்துக்கு நம்பிக்கையளித்தார்.

கடைசி 4 ஓவர்களில் 56 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. லிவிங்ஸ்டன் களத்தில் இருந்ததால் பரபரப்பு உச்சமானது. இந்த நிலையில் ஷதாப் கான் வீசிய 17-வது ஓவரில்

சிக்ஸர் அடித்த லிவிங்ஸ்டன் 42ஆவது பந்தில் சதத்தை எட்டினார்.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் சதமடித்த இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

ஆனால், அடுத்த பந்திலேயே அவர் ஆட்டமிழந்தார். இதனால், இங்கிலாந்து வெற்றி வாய்ப்பு பறிபோனது.

19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 201 ஓட்டங்களை எடுத்த இங்கிலாந்து 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் 3 விக்கெட்களை வீழ்த்தி அசத்திய ஷஹீன் அப்ரிடி ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஐ)





# கடைசி போட்டியிலும் வெற்றி! தொடர் மே. இ. தீவுகள் வசம்!!

குரோஸ் ஐலட், ஜூலை 19

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி இருபது - 20 போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகள் 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன்மூலம், 4-1 என்ற கணக்கில் தொடரை வென்று அசத்தியது மேற்கிந்தியத் தீவுகள்.

மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா இடையிலான 5ஆவது மற்றும் கடைசி இருபது - 20 ஆட்டம் இலங்கை நேரப்படி சனிக்கிழமை அதிகாலை நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் நிகோலஸ் பூரண் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு அதிரடி தொடக்கம் கொடுத்த லெவிஸ் சிறப்பான அடித்தளத்தை அமைத்தார். அவர் 34 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 9 சிக்ஸர்கள் உட்பட மொத்தம் 79 ஓட்டங்கள் விளாசினார்.

இவருக்கு அடுத்தபடியாக அணித்தலைவர் பூரண் 31 ஓட்டங்கள் எடுத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அந்த அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 199 ஓட்டங்களை எடுத்தது.

200 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை துரத்தக் களமிறங்கிய அவுஸ்திரேலியாவுக்கு மீண்டும் தொடக்கம் சரியாக அமையவில்லை. முதல் ஓவரிலேயே ஜோஷ் பிலிப்பி ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு, துடுப்பாட்ட வீரர்கள் அதிரடி காட்டினாலும் அதைப் கூடுதலான ஓட்டங்களாக மாற்றத் தவறினர். அதிகபட்சமாக அணித் தலைவர் அரோன் பின்ஞ் மட்டும் 34 ஓட்டங்களை எடுத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 183 ஓட்டங்களையே எடுத்த அவுஸ்திரேலியா 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதன்மூலம், 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை மேற்கிந்தியத் தீவுகள் 4-1 என்ற கணக்கில் வென்றது.

ஆட்டநாயகன் விருதை எவின் லெவிஸும், தொடர் நாயகன் விருதை ஹேடன் வோல்ஸும் தட்டிச் சென்றனர். (ஐ)

# அயர்லாந்து - தென்னாபிரிக்கா ஒருநாள் தொடர் சமநிலையில்!

டப்ளின், ஜூலை 19

அயர்லாந்து அணிக்கு எதிரான மூன்றாவதும் கடைசியுமான போட்டியில் 70 ஓட்டங்களால் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் தொடரை 1 - 1 என்ற கணக்கில் சமன் செய்தது.

அயர்லாந்தின் டப்ளின் நகரில் நடைபெற்ற இந்த தொடரின் 3 ஆவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 346 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய குயின்ரன் டி கொக், மலன் ஆகியோர் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி சிறந்த அடித்தளத்தை அமைத்தனர்.

இருவரும் இணைப்பாட்டமாக 225 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

குயின்ரன் டி கொக் 91 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 11 பௌண்ட்ரிகள் அடங்கலாக 120 ஓட்டங்களையும், மலன் 169 பந்துகளில் 16 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 177 ஓட்டங்களை விளாசியிருந்தனர். இது தென்னாபிரிக்க வீரரொருவர் பெற்றுக்கொண்ட நான்காவது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து முன்வரிசை வீரர்கள் வரிசையாக தமது விக்கெட்களை இழந்து அரங்குக்குத் திரும்பினர்.

ஒரு கட்டத்தில் 92 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தடுமாறிய அயர்லாந்து அணியை கேர்ட்டிஸ் கெம்பரும் கடைநிலை வீரரான சிமி சிங்கும் போராடி மீட்டனர்.

எனினும், அயர்லாந்து அணி 47.1 ஓவர்களில் 276 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 70 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. கடைசி வரை போராடிய சிமி சிங் ஆட்டமிழக்காது சதம் அடித்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றார். அவர் 91 பந்துகளில் 14 பௌண்ட்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் தென்னாபிரிக்க அணியின் ஜெனமன் மலன் தெரிவானார். (ஐ)

# மொட்டு அரசிலிருந்து சு.க. வெளியேறுமா?

## நாளை மறுநாள் ஜனாதிபதியை சந்தித்த பின்பே தீர்மானம் என்கிறார் தயாசிறி

**கொழும்பு ஜூலை 19**

**"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டு அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து நாளை மறுநாள் 21ஆம் திகதி தீர்மானிக்கப்படும்."**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாளை மறுதினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னரே அரசில் எமது வகிபாகம் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

அரசு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்த ஆறு யோசனைகள் ஏற்கனவே சுதந்திரக் கட்சியின் மத்திய செயல்குழுவிடம் முன்மொழியப்பட்டுள்ளன.

ஜனாதிபதியை நேரில் சந்தித்ததன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

ஆளும் கட்சியிலிருந்து வெளியேறுவது, அரசுடன் இணைந்து ஒன்றாகப் பயணிப்பது, எதிர்வரும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவது உள்ளிட்ட சில முக்கிய யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன" - என்றார். (இ)



# நீதி கோரி ஹற்றனில் நேற்று ஆர்ப்பாட்டம்

ஹற்றன், ஜூலை 19

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாகப் பணியாற்றி வந்த நிலையில் உயிரிழந்த டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், சிறுமியின் மரணத்துக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியும் ஹற்றன் நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன், மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் விஜயச்சந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்பட வேண்டும், தரகர் முதல் சிறுமியை வேலைக்கு அமர்த்தியவர்கள் வரை இதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும், மலையகத்திலிருந்து கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர். (இ)

## பேராதனை வைத்தியசாலையின்

# பாதுகாப்பு பிரிவில் 40 பேருக்கு தொற்று

பேராதனை, ஜூலை 19

பேராதனை போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் 45 அதிகாரிகளில் 40 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களில் 11 பெண் அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் பேராதனை தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் நாவலப்பிட்டி, குருந்துவத்த, தெல்தெனிய ஆகிய கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பேராதனை போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றுவதற்காக கண்டி தேசிய வைத்தியசாலையின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களின் குடும்பத்தினர் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

# வடமராட்சியில் குருதிக்கொடை!

வடமராட்சி, ஜூலை 19

வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று குருதிக் கொடை முகாம் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் பிரதேச இளைஞர் சம்மேளன பொருளாளர் ஆனந்தபவன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்குகளை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், கிராமசேவகர் தோமஸ் யூட், வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் கிராமசேவகர் தர்மகுலசிங்கம் உட்பட பலரும் ஏற்றிவைத்ததை தொடர்ந்து இரத்ததான முகாம் இடம்பெற்றது. (ஐ)

# மக்கள் பிரதிநிதியான ரிஷாத் பதியுதீன் உண்மையை தெளிவுபடுத்தவேண்டும்

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை



கண்டி, ஜூலை 19

"மலையக சிறுமியின் மரணம் தொடர்பில் முழுமையானதொரு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். தமது வீட்டில் நடந்த சம்பவம் தொடர்பில் உண்மை நிலைவரத்தை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டிய சமூகப் பொறுப்பு, கடமை ரிஷாத் பதியுதீனுக்கு இருக்கின்றது. ஏனெனில், அவர் ஒரு மக்கள் பிரதிநிதி. கட்சித் தலைவர். இதற்கெல்லாம் அப்பால் ஒரு தந்தை. எனவே, அவர் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும். உண்மை வெளிவர, நீதியைப் பெற்றுக் கொடுக்க அவர் ஒத்துழைப்பு வழங்குவார் என நாம் நம்புகின்றோம்."

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிறார்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இந்நிலையில் அற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு சிறார்களை வெளியிடங்களுக்குத் தரகர்கள் வேலைக்கு அழைத்துச் செல்கின்றமையானது ஆட்கடத்தலுக்கு ஒப்பான செயல். எனவே, சிறார்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அவர்களைப் பொறுப்பேற்பவர்கள் என அனைவரும் ஏதேவொரு விதத்தில் குற்றவாளிகளே.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் மலையக சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பல தரப்பினரும் இது தொடர்பில் குரல் கொடுத்து வருகின்றனர். இளைஞர்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆகவே, இந்தச் சம்பவத்துக்கு நீதி நிவாரணத்தை வலியுறுத்தும் அதேவேளை சமூக மாற்றத்துக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் இவ்வாறானதொரு துயர சம்பவம் நிகழாமல் இருப்பதைத் தடுக்க முடியும்.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் இருந்து சிறார்கள் வேலைக்கு செல்வதை தடுப்பது தொடர்பில் வலைத்தளங்களில் குரல் கொடுக்கும் இளைஞர்கள், களத்தில் இறங்கி சமூக பொறுப்புடன் விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம்" - என்றார். (இ)

# மலையக சிறுமி மரணம் தொடர்பில் முழுமையான விசாரணை வேண்டும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் இ.தொ.கா. செயலர் ஜீவன் வலியுறுத்து

நுவரெலியா ஜூலை 19

"அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய நிலையில் 16 வயது மலையக சிறுமி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் உட்பட அதன் பின்னணி தொடர்பில் முழுமையானதொரு விசாரணையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்."

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவிடம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும், சிறுமி ஒருவரை வேலைக்கு அமர்த்தியமை தொடர்பிலும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3ஆம் பிரிவில் இருந்து 15 வயது சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

இம்மாதம் 03ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சிறுமியின் மரணம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுடன் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (இ)

## அதிநவீன...

கையையொட்டி சீனா தனது கடற்படை பலத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. இலங்கையில் உள்ள துறைமுகங்களை சீன நிறுவனங்கள் குத்தகைக்கு எடுத்துள்ள நிலையிலேயே இந்தியா தன்னுடைய நீர்மூழ்கியை தூத்துக்குடிக்கு நகர்த்தியிருப்பதாக இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

“இந்தியாவின் நட்பு நாடாக இருந்த இலங்கை சீனாவிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சீனாவும் இலங்கைக்கு பல்வேறு வளர்ச்சி பணிகளுக்காக கடன்களை வாரி வழங்கி வருகிறது. இந்தியாவின் வட பகுதியான லடாக் பகுதியில் சீனா ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதால் அங்கு ஏற்பட்ட பதட்டம் முழுமையாக நீங்கவில்லை இரு நாட்டு பிரதிநிதிகள் இடையே பேச்சு வார்த்தை பலமுறை நடந்த போதிலும் அங்கு முழு அமைதி ஏற்படவில்லை.

இந்த நிலையில் தென்பகுதியான தமிழக கடலோரம் இலங்கை பகுதியில் சீனா தனது கப்பற்படையை வலிமைபடுத்தி வருகிறது. இது சீனா- இந்தியா போர் பதற்றத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

தென்தமிழகத்தில் ஐ.என்.எஸ்.கட்டபொம்மன் தூத்துக்குடி அனல்மின் நிலையம், கூடங்குளம் அணுமின் நிலையம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம், புதிதாக குலசேகரப்பட்டினத்தில் அமைய உள்ள ராக்கெட் ஏவுதளம் என மிக முக்கிய நிறுவனங்கள் இங்குள்ளது.

இதையொட்டி, இந்திய தரப்பிலும் இராணுவ வலிமையை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, நாட்டின் அனைத்து எல்லைகளிலும் பீரங்கிகள், அதிநவீன போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், விமானம் தாங்கி கப்பல்கள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதனிடையே நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரையிலான கிழக்கு கடற்கரை சாலை ராணுவ தளவாடங்களை எளிதாக கொண்டு வரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. பல இடங்களில் ஏற்கனவே இருக்கும் சாலையை அகலப்படுத்தாமல் புதிய சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

தேவை ஏற்பட்டால் போர் விமானங்கள் இந்த சாலைகளில் இறங்கும் வண்ணம் சாலைகள் அமைக்கப்படுகிறது. அதற்கான பணிகள் ஒருபுறம் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இந்திய கடற்படைக்கு சொந்தமான அதிநவீன நீர்மூழ்கி கப்பல் ‘சிந்துஷாஸ்ட்ரா’ தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள ஐ.என்.எஸ். கட்டபொம்மன் கடற்படைக்கான கப்பல் தளத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறை சரிசெய்யவும், பெட்ரோல், டீசல் மற்றும் அடிப்படை தேவையான தண்ணீர் நிரப்புவதற்காகவும் நீர்மூழ்கி கப்பல் தூத்துக்குடி கப்பல்தளத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், நடுக்கடலில் போர் ஒத்திகைக்காகவும் இந்த ‘சிந்துஷாஸ்ட்ரா’ நீர்மூழ்கி கப்பல் வந்து இருக்கலாம் என்றும் தகவல் தெரிவிக்கபடுகிறது. கப்பல் இன்னும் ஒரு வார காலம் தூத்துக்குடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படலாம் என்று கூறப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்தில் நீர்மூழ்கி கப்பல் நிலை நிறுத்தப்பட்டுள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இந்திய கடற்படை சார்பில் இதுதொடர்பாக அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை” என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில்...

களில் கொரோனா வைரஸின் பல வகையான மாறுபாடுகள் பரவி வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“டெல்டா“ வைரஸ் வகை உலக நாடுகளில் தற்போது ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், இலங்கையால் அதிலிருந்து தப்பிக்க முடியாது.

எனினும், தடுப்பூசி பெற்றவர்கள் ‘டெல்டா’ மாறுபாட்டினால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.

இலங்கையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ‘அஸ்ட்ரா செனெகா’, ‘பைசர்’ மற்றும் ‘சினோபார்ம்’ தடுப்பூசிகள் டெல்டா வகைகளுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கின்றது.

இதனிடையே தென் அமெரிக்காவில் பெரு மாநிலத்தை மையமாகக் கொண்ட பல நாடுகளில் ‘லாம்ப்டா’ வகை வைரஸ் பரவி வருகின்றது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தை மையமாக கொண்ட பல நாடுகளில் ‘எப்சிலின்’ வைரஸ் பரவி வருகின்றது” - என்றார். (இ)

## தடுப்பூசி...

மருத்துவர்கள் ரஜீவ டி சில்வா காந்தி நாணயக்கார பேராசிரியர் சன்ன ரணசிங்க ஆகியோர் கோவிட் தடுப்பூசிகள் தொடர்பான ஆலோசனை குழுவிலிருந்து விலகியுள்ளனர். தடுப்பூசி ஆலோசனை குழுவின் ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாகவே தாங்கள் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அவர்கள் தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் சீன தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கவேண்டுமா என ஆராய்வதற்காக இடம்பெற்ற அவசர கூட்டத்தின்போது ஆலோசனை குழுவில் கடும் கருத்துவேறுபாடு காணப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

டெல்டா கொரோனா வைரசிற்கு எதிராக குறைந்தளவு பயன்அளிக்க கூடியது சினோவக் என ஆலோசனை குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். ஆலோசனை குழுவின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் சீன தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு நிபந்தனையுடன் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

## வடக்கில் நேற்று...

னைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 12 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 7 பேருக்கும், வேலணை பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்குமாக யாழ். மாவட்டத்தில் 26 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேபோன்று வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கு தொற்று இனங்காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலையில் நால்வருக்கும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒருவருக்குமாக 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

மன்னார் பொது மருத்துவமனையில் நால்வருக்கும், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதுதவிர, புதுக்குடியிருப்பு, வெள்ளாங்குளம் தனிமைப்படுத்தல் முகாம்களில் இருவருக்கும் தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. (ஐ)

## 1,402 பேருக்கு...

னாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 843 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 56 ஆயிரத்து 676 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 24 ஆயிரத்து 459 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (இ)

# பிரபாகரனின் திரைப்படத்தை தரவிறக்கிய இருவர் சிக்கினர்

நுவரெலியா, ஜூலை 19

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட “மேதகு” தமிழ்த் திரைப்படத்தை இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில், நுவரெலியா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, ஹாவாஎலிய பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, பிரதான பஸ் தரிப்பிடத்தில் வியாபார நிலையமொன்றை நடத்தி வரும் நபரொருவரும் அவரது நண்பர் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, கார்கில்ஸ் கட்டட வளாகத்திலுள்ள பிரதான சந்தேகநபருக்குச் சொந்தமான மற்றொரு கடையில் 50 ரூபா வசூலிக்கப்பட்டு, படம் பிரதியெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேற்படி இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று நுவரெலியா பொலிஸார் மேலும் கூறினார். (இ)

# கொத்தலாவலை பல்கலை சட்டத்தை ஒன்றிணைந்து எதிர்க்க நடவடிக்கை

### சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூலை 19

பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை எதிர்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உத்தேச சட்டமூலம் நாட்டின் இலவச கல்வி கட்டமைப்புக்கும் அதன் இருப்புக்கும் பேரழிவை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, உத்தேச கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை உடனடியாக மீள பெறுமாறு ஜனாதிபதியிடம் கோருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தான்றோன்றித்தனமாக பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்தி அல்லது உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சித்தால் மகா சங்கத்தினர் பல்கலைக்கழக சமூகம், சிவில் அமைப்புகள், ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் மக்களை ஒன்றுதிரட்டி அந்த முயற்சியை தோற்கடிப்பதற்கு திட சங்கற்பத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி செயல்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாணத்தை அங்கஜனுக்கு கொடுத்து விட்டார்களா?

### சுகிர்தன் கேள்வி

வடமராட்சி, ஜூலை

இந்த நாட்டை பாதுகாப்பதற்கு சிங்கள மக்களும் அனைத்து அரசியலவாதிகளும் கிளர்ந்தெழ வேண்டுமென, வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தை அங்கஜன் இராமநாதனுக்கு கொடுத்து விட்டார்களா என்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியிலே இருக்கின்றது என்றும் கூறினார்.

வடமராட்சி கிழக்கில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், இந்த நாட்டை ஒரு குடும்பத்தின் கைகளில் கொடுக்காமல் இருக்க வேண்டும் என ஜனாதிபதி தேர்தலின் போது தெரிவித்திருந்தோம் எனவும் அதையும் மீறி சிங்கள மக்களது வாக்குகளால் ஜனாதிபதியாக பதவியேற்றதுடன், இந்த நாட்டை ஒரு குடும்பத்தினுடைய நாடாக மாற்றக்கூடிய வகையில் செயலாற்றி வருகின்றார்கள் எனவும் சாடினார்.

## பங்களாதேஷ்...

மாம்பழங்களை நேற்று ஒப்படைத்தார்.

இந்த பரிசுக்கு பங்களாதேஷ் பிரதமருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கும் இடையிலான பயலனளிக்கும் நட்பு உறவைக் குறிக்கிறது என்று அவர் கூறினர்.

## நம்பிக்கையில்லா...

ளிட்ட எதிர்கட்சியின் 44 உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையிலாப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர்.

இன்றும், நாளையும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதன்போது சுயாதீனமாகக் கருத்துத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவார்கள் என ஆளும் கட்சி முக்கியஸ்த்தர் ஒருவர் தெரிவித்தார்.

விவாதம் முடிவடைந்த பின்னர் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தால் வாக்கெடுப்பு இடம்பெறும் எனவும் ஆளும் கட்சி பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

## நம்பிக்கையில்லா...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றிரவு நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாளை மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## 30 ஆண்கள்...

கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 779 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 46 பேரில் 30 ஆண்களும், 16 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 08 ஆண்களினதும், 05 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 22 ஆண்களினதும் மற்றும் 11 பெண்களினதும் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

ஈழநாடு
Eelanadu

# 12 சங்கங்கள் இணைந்து மலையகத்தில் புதிய தொழிற்சங்க கூட்டணி உருவானது

ஹற்றன், ஜூலை 19

**மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஓரணியில் திரண்டு எதிர்ப்பதற்கும், தேசிய பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனம் எனும் கூட்டணியை உருவாக்குவதற்கும் மலையகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் பிரதான தொழிற்சங்கங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளன.**

இணையவழி ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்தில் செயற்படும் 12 தொழிற்சங்கங்கள் இதற்கான விருப்பத்தை வெளியிட்டதாக மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

மேலும், " பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அவர்களின் தொழில் உரிமைகள் மறுக்கப்படுவதுடன் சலுகைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், வேலை சுமையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் தோட்டப்பகுதிகளில் மலையக தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை தடுப்பதற்கு கம்பனிகள் முற்படுகின்றன. அவ்வாறு செய்து தொழிற்சங்கங்கள் இல்லாத காலப்பகுதியில் ஆங்கிலேயர்கள் நிர்வாகத்தை முன்னெடுத்ததுபோல செயற்படுவதற்கு முற்படுகின்றன.

இது பயங்கரமானதொரு நிலையாகும். தொழிற்சங்க கட்டமைப்பு சிதைக்கப்பட்டால் தொழிலாளர்கள் உதிரிகளாக்கப்படுவார்கள். ஒற்றுமை சிதைக்கப்படும். அடக்குமுறை தலைதூக்கும்.

எனவே, இவ்வாறானதொரு நிலை ஏற்படுவதை தடுப்பதற்கு மலையகத்திலுள்ள பிரதான தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கிடையில் இணையவழி கலந்துரையாடலொன்று நடைபெற்றது. மலையக புத்திஜீவிகள் சிலரும் இதில் பங்கேற்றனர். இதன் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள்மீதான அடக்குமுறையை ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும் எனவும், தேசிய பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனமொன்றை உருவாக்கி, வழிகாட்டல் குழுவை அமைத்து அதன் ஊடாக இவ்விடயங்களை கையாளன வேண்டும் என இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்சார் விடயத்தில் கட்சி, தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைவதற்கு தொழிற்சங்கங்கள் ஆதரவை தெரிவித்துள்ளன. எனவே, சட்டம் மற்றும் அரசியல் ரீதியில் வெவ்வாறாக அன்றி ஒன்றாக அழுத்தம் கொடுக்கக்கூடிய சூழல் இதன்மூலம் உருவாகும் - என்றார். (ஐ)

## காட்டு யானையின் தாக்குதலில் விவசாயிகள் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 19

கஹட்டகஸ்திகிலிய - கோக்மடுவ பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி விவசாயிகள் இருவர் நேற்று உயிரிழந்தனர் என்று கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்துக்குள் நேற்றுக் காலை புகுந்த காட்டு யானையை விரட்டும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டிருந்தபோது, காட்டு யானையானது விவசாயிகள் இருவரைத் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கோக்மடுவே பிரதேசத்தைச் சேர்ந்த குணவர்தனகே விக்கிரமசிங்க (வயது 63), மல்ஹாமிகே செனவிரத்ன (வயது 61) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இருவருக்கு அருகிலும் யானை மிக நீண்ட நேரமாக நின்றுக்கொண்டிருந்தது எனவும், இதனையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது எனவும், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் வெடி வைத்ததன் பின்னரே யானை அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளது எனவும் கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரின் சடலங்களும் கஹட்கஸ்திகிலிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

காட்டு யானைகளின் தொல்லையால் தாம் உயிர் அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவைத்துள்ளனர். (இ)

## இரண்டு மாதங்களுக்கேனும் கொடுப்பனவை வழங்குங்கள்

### தனியார் பஸ் சேவையாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவல் நிலைமையால் தமது வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே 15 ஆயிரம் ரூபா என்ற முறையில் குறைந்தது இரண்டு மாதங்களுக்கேனும் கொடுப்பனவு அல்லது சம்பளத்தை வழங்குமாறும் அனைத்து இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள அந்தச் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித்,

"சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாக எமது சேவை முடங்கியிருப்பதால் தனியார் பஸ்துறையைச் சேர்ந்த 60 ஆயிரம் பேர் பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

நாம் அரசிடம் கோருவது என்னவெனில் இலங்கை போக்குவரத்துச் சேவையிலுள்ளவர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்கப்படுவதைத் போன்று தனியார் பஸ்போக்குவரத்துச் சேவையாளர்களுக்கும் 15 ஆயிரம் ரூபா என்ற வகையில் இரண்டு மாதங்களுக்குக் கொடுப்பனவை வழங்குங்கள்" - என்றார். (இ)

## ஆடைத்தொழிற்சாலையில் 124 பேருக்குக் கொரோனா



கொழும்பு, ஜூலை 19

மெதிரிகிரிய ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களில் 124 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது என அப்பகுதிக்குப் பொறுப்பான பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தொழிற்சாலையில் முதலில் நால்வருக்குத் தொற்று உறுதிபடுத்தப்பட்டது எனவும், அதன்பின்பு ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 124 பேருக்குத் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனவும் பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களது குடும்ப உறுப்பினர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

## மலையக சிறுமி உயிரிழந்தது எவ்வாறு? உண்மை விரைந்து கண்டறிப்படவேண்டும்

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



மட்டக்களப்பு, ஜூலை 19

"மலையகச் சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மை கண்டறிப்பட வேண்டும். சிறுவர்களைப் பணிக்கமர்த்த முயலும் முகவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சிறுவர்களின் கல்வி கற்கும் உரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும்."

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

ரிஷாத் பதியுதீன் எம்.பியின் வீட்டில் வேலை பார்த்த 16 வயது சிறுமி ஒருவர் தீ காயங்களுக்கு உள்ளாகி மரணமானார். இது தொடர்பில் சாணக்கியன் விடுத்த அறிக்கையில்,

"குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மை கண்டறிப்பட வேண்டும். சிறுமியின் மரணத்தில் மறைந்துள்ள மர்மம் துலங்க வேண்டும்.

நீதிக்கு மேல் எவரும் இல்லை. இந்த விடயத்தில் சரியான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதன் ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என நம்புகின்றேன்.

இதேபோன்று நாட்டில் எத்தனையோ விடயங்கள் எங்களுக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருக்கின்றன. முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் இந்த விடயம் நடைபெற்றுள்ளமையினாலேயே வெளியில் தெரியவந்துள்ளது.

எனினும், எங்களுக்குத் தெரியாமல் எங்கெங்கோ எல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் தினந்தினம் நடை பெற்றுகொண்டு தான் இருக்கின்றன.

அத்துடன், சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களும், பாலியல் துஷ்பிரயோகங்களும் தினந்தோறும் வெளி வந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை அரசு விரைந்து முன்னெடுக்க வேண்டும் - என்றுள்ளது. (இ)

## டயகம பெண் ஹிஷாலினி அகால மரணம் குறித்து மனோ, உதயகுமார் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 19

கடந்த 3ம் திகதி, பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதுர்தீன் இல்லத்தில் தீக்காயங்களுக்கு உள்ளாகி பின்னர் மருத்துவமனையில் மரணமடைந்த டயகம பகுதியை சேர்ந்த ஹிஷாலினி என்ற பெண் தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பியும், நுவரேலிய மாவட்ட த.மு.கூ. எம்.பி. உதயகுமாரும், நேற்று பொரளை பொலிஸ் நிலையம் சென்று இதுவரை நடைபெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம கண்காணிப்பாளர் (சிஐ) துமிந்த பாலசூரிய மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பணியக பிரதம கண்காணிப்பாளர் (சிஐ) இனோகா ஆகியோரை சந்தித்த எம்.பீக்கள் இவ்விவகாரம் தொடர்பில் இதுவரை நடந்துள்ள விசாரணைகள் பற்றியும், மரணமானவரின் உடற்கூற்று சட்ட மருத்துவ அறிக்கை தொடர்பிலும் முழுமையாக கேட்டறிந்தனர்.

தற்போது சங்கர் என்ற இந்த தொழில் தரகர் இன்று திங்கட்கிழமை மேலதிக விசாரணைகளுக்காக, கொழும்பு பொரளை பொலிஸாரினால் கொழும்புக்கு கொண்டு வரப்படுகிறார். இந்நிலையில், ஹிஷாலினி என்ற இந்த பெண்ணின் அகால மரணம் தொடர்பில் நாட்டில் நிலவும் கருத்து கள் சம்பந்தமாக கண்டி மாவட்ட த.மு.கூ. எம்.பி. வேலு குமார், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பியுடன் கலந்தாலோசித்தார்.

இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் குடும்பத்தவர் மற்றும் பதுர்தீன் எம். பி. தலைமையிலான, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக, அவர்கள் தரப்புகள் தொடர்பிலான முழுமையான விபரங்களை ஒரு எழுத்துமூல அறிக்கையாக உடன் வெளியிடும்படி, வேலு குமார் எம்.பி. சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துள்ளார்.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-காதலில்
விழுந்தேன்,நிபுணன் திரைப்பட காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-அகம் சுரக்கும்
சிறப்பு வைத்திய நிபுணர்



7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் நிதி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு